
" ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"


# கலசம்
# KALASAM

ஆடி - ஆவணி - புரட்டாதி 1995




இலண்டன் ஸ்ரீ முருகன்
தேர்த்திருவிழாச்
சிறப்பிதழ்

லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ் £1.00


தென்னவன் சிவனின்
திருவருட்டிறன் சொல்லும்
தெய்வீக எழுத்துக்கள்
எத்தனையோ அத்தனைக்கும்
எங்களது ஆத்மீக வணக்கங்கள்

ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

# கலசம்

ஆடி-ஆவணி-புரட்டாதி 1995

மணி 3 ஒலி 11

பிறந்து விட்டோம்! உண்டு, உடுத்து வளர்ந்து கொண்டிருக்கிறோம்! ஆனால் போகும் பாதை மட்டும் புரியாமல் கால் போன போக்கில் நடந்து கொண்டிருக்கிறோம். ஏன் இந்த அறியாமை நிலை என்று யாரும் சிந்தித்தோமில்லை!

கண்ணை மூடிக் கொண்டு நிலையற்ற இவ்வுலக வாழ்வைக் காதலித்துக் கொண்டிருக்கிறோம்.

பாதைகள் எல்லாம் இறைவன் வகுத்தவைகளே! இது புரியாமல் எது சரியான பாதை என்று அறிவதாக தம்பட்டம் கொட்டிக் கொண்டு நேரத்தை அவமே கழிக்கிறோம்.

நீ நடக்கும் பாதையே சிறந்தது என்று ஏன் அடம்பிடிக்கிறாய்? வெறித்தனம் கொண்டு ஏன் அலைகிறாய்? உன்னுடைய தீவிரத்தனத்தால் உனக்குள்ளே இருக்கும் இறைத்தன்மையை நீயே கொல்வது உனக்கேன் புரியவில்லை?

பாதை மாறிக்கூட சிலர் நடக்கிறார்கள் தான். நடக்கட்டுமே! உனக்கென்ன?

அவனுடைய பாதையைப் பிழையென்று கூற யார் உனக்கு உரிமை தந்தது? உன் பாதையிலேயே நீ நடந்து கொண்டிரு.! அதை விட்டு உன்னுடைய கவனத்தை உன் பாதையிலிருந்து எடுத்து பாதை மாறியவனை ஆராய முற்படாதே! பாதை மாறிப் போகின்றவன் அப் பாதை பிடிக்கவில்லையென்றால் வேறு பாதைக்குச் செல்வான். அதுவும் பிடிக்கவில்லையென்றால் திரும்பவும் பழைய பாதைக்கு வருவான். அவன் கூடத்தூரம் நடக்கிறானென்று நீ ஏன் கவலைப்படுகின்றாய்! அவன் நடக்கின்ற தூரத்தை இறைவன் அல்லவா நிர்ணயித்திருக்கின்றான்.

சேவை செய்! நீ செய்யும் சேவைக்கு எல்லைகள் போடாதே! சேவை செய்யப் புறப்பட்டுவிட்டால் நீ உன் தனித்துவத்தை இழந்து தான் ஆக வேண்டும். விட்டுக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். அதைவிட்டு நான் இப்படித்தான் சேவை செய்வேன் என்று பிடிவாதம் பிடித்தால் –அது உன் சுயநலம்.

உன் பாதையை, நீ செய்யும் சேவையை, உன்னை முதலில் நீ நேசி!

இன்று பார் முருகன் தேரேறி வருகிறான். எல்லாவற்றையும் மறந்துவிட்டு அவனை உன் உள்ளத்துள் இருத்து.

வேண்டாப் போர்கள் உனக்கு ஏன்?

நாட்டைப் பார்! ஆத்மீக யுத்தம் நடப்பதைப் பார்.

முருகன் சூரபத்மனை அழிக்கவில்லையா? இதை நீ ஏற்றுக் கொள்ளவில்லையா?

தாடகையை அழிக்க விசுவாமித்திரர் இராமனை அழைத்துச் செல்லவில்லையா?

இவற்றையெல்லாம் படித்துப் படித்துப் பக்திப் பரவசமடைந்த நீ இதையும் ஏற்றுக் கொள்!

உன் உடன் பிறப்புகள் உயிர் கொடுப்பதை இழப்பதை ஜீரணித்துகொள்!

தயங்காதே! இன்று முருகனைக் கேள். தேரூரும் திருமுருகா எம்மூர் காக்கச் செல் என்று அழுது கேள்! அழு! மனம் விட்டு அழு!

ஓம் நமசிவாய என்று ஆயிரத்தெட்டுதரம் சொல்லு! ஓம் சரவணபவ என்று ஆயிரத்தெட்டுத்தரம் சொல்லு! உன் உடன் பிறப்புக்களுக்காக இந்தநிமிடமே ஆரம்பி!


மு. நற்குணதயாளன்

ஆசிரியர் : திரு மு. நற்குணதயாளன்
துணை ஆசிரியர் : திரு க. ஜெகதீஸ்வரன்
நிர்வாகப் பொறுப்பு : திரு வ. இ. இராமநாதன்
பொருளாதாரப் பொறுப்பு: திரு. சிவ. அசோகன்
பொதுமக்கள் தொடர்பு : திரு மாணிக்கம் சுரேஷ்
விற்பனை விநியோகம் : திரு. இ. முருகதாசன்
மகளிர் பகுதி : திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
விளம்பரப் பொறுப்பு : திரு. ந. சிவராசன்
வெளியீடு : சைவ முன்னேற்றச் சங்கம் (பிரித்தானியா) அச்சமைப்பு : சை.மு.ச. பதிப்பகம் அச்சுப் பதிப்பு: செல்வம்

தொடர்பு முகவரி
'KALASAM' 2 SALISBURY ROAD, MANOR PARK, LONDON E12 6AB ENGLAND

தேர்த் திருவிழாவை ஒட்டிய சிறப்புக் கட்டுரை

# தேவியர் இருவர்



ஜுலை 23, 1995 ஞாயிற்றுக்கிழமை இலண்டன் ஸ்ரீ முருகன் இரதமேறி வீதிஉலா வருகிறார். பக்தர் வெள்ளம் வீதி முருவதும் நிரம்பி வழிகின்றது. இந்த ஆனந்தக் காட்சிகாண ஆயிரம் கண் இருந்தாலும் போதாது. படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என ஐந்து தொழில்களையும் பிரதிபலிக்கும் இப்பெருவிழா வழியாகத் திருமுருகன் திருஅருள் பாலிக்கின்றார். இன்றைய தினத்தில் ஸ்ரீ முருகன் பற்றிச் சிந்திப்பது சாலப் பொருத்தமானது.

முருகனுக்கு ஏன் இரு மனைவிகள்? என்றும் முருகனுக்கே இரண்டு மனைவியா? என்றும் பலர் நகைச்சுவையாகவும் சுயநலத்துக்காகவும் பல கதைகள் பேசுவது கேட்டிருக்கின்றோம். இதைக் கொஞ்சம் சிந்திப்போம் . தெய்வயானை தேவேந்திரன் மகள். தேவேந்திரன் அரசகுலம். வள்ளிநாச்சியாரோ வேடுவருடன் வளர்ந்தவள். அதனால் வேட்டுவக் குலம் என்று சொல்லலாம். இருவரும் திரு முருகனின் இருமனைவிகள். அரசனையும் வேடுவனையும் ஒப்பிடும் விடயம் புதிதல்ல. புறநானூற்றுக் காலத்திலேயே இருந்திருக்கின்றது. வெள்ளைக்குடை நிழலிலன் கீழ் ஆண்டுகொண்டிருப்பதுவும் அரசன் வெயில் மழை என்று பாராது இரவுபகல்கண் துஞ்சாது வயலில் வளரும் பயிரை மிருகங்கள் வந்து அழித்துவிடாது பாதுகாப்பவன் வேடன். ஆனால் இவர்கள் இருவருமே உண்பது ஒரு வயிற்றுக்குத் தான். நாழி என்று சொல்லப்படும் ஒரு அளவுதான். உடுப்பதும் நான்கு முழம் தான். மானங்காக்க உடையும். வயிறு நிரப்ப உணவும் எல்லோருக்கும் ஒர அறை தான்.... இதனால் அரசனாக இருந்தால் என்ன ஆண்டியாக இருந்தால் என்ன உண்பதும் உடுப்பதும் போக மீதியை உலகு பயன்பெற உதவவேண்டும் என்கின்ற மனோபாவம் அந்தக்காலத்தில் இருந்தது. சங்க இலக்கியப்பாடல்களில் அரசனும் ஆண்டியும் மனிதர்களில் சமமானவர்கள் தான் என்ற இந்தத் தத்துவத்தைக் காட்டவே திருமுருகன் தெய்வயானையையம் வள்ளிநாச்சியாரையும் தமது இருமனைவிகளாக ஏற்றுக்கொண்டாரென்று கொள்ள லாமல்லவா!தென்கடல் வளமும் பொதுமை இன்றி வெண்குடை நிழற்றிய ஒருமை போக்கும்

***நெருகல்யாமத்து நிழற்றிய பகலும் துஞ்சான்***
***கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவர்க்கு***
***உண்பது நாழி உடுப்பவை இரண்டே***
***பிறவும் எல்லாம் ஊரொக்கும்பே***
***செல்வத்துப் பயனே ஈதல்***
***துய்ப்பேம் எனினே தப்புள பலவே.***


என்பது தான் அந்தப் புறநாறூற்றுப் பாடல்.

தெய்வயானை இந்திரன் மகளாகப் பிறந்து முருகனை அடையத் தவம் செய்தவர். வள்ளி நாச்சியாரோ முருகனே தேடிச்சென்று திருமணம் செய்து கொண்டவர். சைவசித்தாந்தத்திலே இறைவன் ஆன்மாக்களுக்கு அருளும் இரு வழிகளை இங்கு ஒப்பிடலாம் .

ஆன்மாக்கள் பிறவிபயன் அறுத்து முத்தியின்பம் பெறும்பொருட்டு இறைவனை நோக்கித் தியானம் செய்து அந்த ஆத்மாக்களை ஆற்றுப்படுத்தும் பொருட்டு இறைவன் தேடிச் சென்று அருளுகின்றான். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், ஆகிய மூவரும் இறைவனை வழிபட்டு திருமுறை பாடி வந்தித்தவர்கள். சுந்தரரோ உலகவியல்களில் திணைக்க முற்பட்டபோது இறைவன் ஓடிச்சென்று அவரை தடுத்தாட்கொண்டவர். இறைவன் ஆன்மா தொடர்பை தெளிவுற விளக்கும் இந்தத் தத்துவத்தை கந்தபுராணமூலம் கற்றறியலாம்.

ஞாலக்கோ

# மட்டக்களப்பில் ஒரு தான்தோன்றீஸ்வரம்



குணசிங்கன் என்னும் அரசன் மட்டக்களப்பை ஆளும் போது கலிங்க ஒரிசா தேசத்தை அரசுபுரியும் குகசேனனுடைய புத்திரியாகிய உலகநாச்சி என்பவள் கௌதம புத்தரின் தசனத்தை எடுத்து தனது கூந்தலில் மறைத்து வைத்து கைலயங்கிரியிலிருந்து குருவம்சத்தார் மூலம் எடுத்துக்கொண்டு வந்து மணிபுரத்தில் இறங்கி விசய துவீபத்தில் வந்து மேகவர்ணனைக் கண்டு கோத்திரம் எல்லாம் கூறி விளங்கப்படுத்தி புத்தருடைய தசனத்தைக் கொடுத்தாள் அவனும் அளவிலாத மகழ்ச்சி கொண்டு அவளுக்கு வேண்டிய சன்மானமெல்லாம் கொடுத்து மேலும் வேண்டுவது என்னவென்று கேட்டான். அவள் குடிவாழ்வில்லாத ஊர் ஒன்று தனக்கு வேண்டுமென்று கேட்டாள். அதைக் கேட்டமேகவர்ணன் மட்டக்களப்பை அரசுபுரியும் குணசிங்கன் தனது நண்பனாகையால் ஒரு திருமுகத்தை வரைந்து அவனுக்குக் கொடுத்து அனுப்பினான். குணசிங்கன் திருமுகத்தை வாசித்து சுந்தரி உரிமை கொண்டாடி மட்டக்களப்பிற்கு வடபாக மாயுள்ள அம்பிளாந்துறைக்கப்பால் மண்ணேறுமுனை வளர்ந்து காடு செறிந்து குடிவாழ்வற்ற பகுதியை நிரந்தரமாயீந்து, ஒரு இடத்தில் குடிகளை அனுப்பி வெட்டித்தூர்த்து மாளிகையுண்டாக்கி உலகநாச்சிக்கு கையளித்தான். உலக நாச்சியும் குடி வாழ்ந்து சிலகாலம் சென்ற பின் தனது தம்பி உலகநாதனை தந்தையிடத்தில் அனுப்பிக் குகன் குடும்பம் நூறும் சிறைக்குடும்பம் முப்பதும் எடுப்பித்து குகக்குடும்பங்களைத் தன் அருகா மிருத்தி அந்த இடத்தில் ஆலயமியற்றிச் சிவலிங்கத்தை ஸ்தாபித்து வணங்கி வந்தனள். பின்பு இன்னும் ஒரிசா நகரமிருந்து அனேக குடும்பங்களை அழைத்து காப்புமுனைக் காட்டையழித்துச் செப்பனிட்டு அப்பகுதிக்கு அரசியாகி மண்முனை என நாமம் சூட்டி வாழும்காலம் களப்பு முனைக்குத் தென்பாகமாயுள்ள காட்டை அழிப்பிக்கும் போது திடகனென்பன் கொக்கு நெட்டிமரத்தை வெட்ட உதிரம் பாய்ந்தது. அதைக் கண்ட திடகன் தனது உடைத்துணியால் மரத்து

வெட்டுவாயைக் கட்டிவைத்துப் போட்டு உலக நாச்சிபீடத்தில் இந்தச் செய்திகளை அறிவித்தான். உலக நாச்சியும் அந்த இடத்தில் போய்ப்பார்க்கும்போது அந்த கொக்குநெட்டி மரத்தடியில் ஒரு லிங்கம் இருந்தது. மறுபேர்கள் கண்ணுக்குப் புலப்படாதபடியால் உலக நாச்சியும் சிவலிங்கம் எனத் திட்டம் பண்ணி அவ்வனத்தை அழிப்பித்து தூசி நீக்கி ஆலயமியற்றி வடநாட்டுக் கொல்லிடத்தில் இருந்து பட்டர் மூவரை அழைப்பித்து பூசைபுரியும்படி திட்டம் செய்து அதிக கழனிகள் திருத்தி குணசிங்கனுடன் பிறந்தவனாகிய கிரசரசன் என்பவனை மணந்து ஒரு புத்திரனையும் ஒரு புத்திரியையம் பெற்று வாழந்து வருங்காலம் தந்தபுரத்திலிந்து ஆரம்தொடுக்கும் குடிகள் பதின்மரை அழைத்து தனது குடிக்கருகாமை அமர்த்தி பக்தன் என்பவனை அவர்களுக்குத் தலைவனாக்கி இரண்டு ஆலயங்களுக்கும் ஆரங்கட்டும் குடிகளாக வகுத்தனள். பின்பு கலிபிறந்து மூவாயிரத்து ஐநூற்று முப்பதாம் வருஷம் குணசிங்கனின் புத்திரன் அதிசூதன் என்பவனுக்கு மண்முனையையும் இரு தினங்களில் பட்டங்கட்டினான்.

இவ்வாறு மட்டக்களப்பு மான்மியம் தொடர்கின்றது. இது விடயமாக சில உண்மைகளை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ளமுடியும். கொக்கட்டிச்சோலை சிறிதான் தோன்றீஸ்வரருக்கு தொடக்க ஆலயம் சுமார் ஆயிரத்து 560 ஆண்டுகளுக்கு முன்னர் எழுப்பப்பட்ட தென்பதுவும் அக்காலத்திற்கு முன்னிருந்தே மட்டக் களப்பு பிரதேசம் (பாணமை தொடக்கம் வாகரை வரையும் ) முக்குக வம்சத்தினதும் குறிப்பாக கலிங்க குலத்தினதும் ஆழுகைக்குட்பட்டிருந்ததையும் மேற்படி மான்மியத்தில் சொல்லப்படும். மன்னன் மேகவர்ணனே மகாவம்சத்தில் கூறப்படும் அரசனாவான் என்பதினால் அக்காலத்திலேயே மட்டக்களப்பு தனிப்பேரரசாய் விளங்கிய தென்பதுவும் புலனாகின்றது. மேலும் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலுள்ள சிவலிங்கத்தின் மீது திகடனின் கோடரிபட்ட இடத்தில் "சாத்துப்படி" எனும் சந்தனம் வைத்து மறைப்பதுவும் சிவலிங்கம் வெளிப்பட்ட சம்பவத்தை வலுப்படுத்துவதாக அமை கின்றது. ஆலயம் அமைவுறுவதற்கு முன்னரே இச் சிவலிங்கமானது நீண்டகாலமாக வேடுவரின் வழிபாட் டுக்குட்படுத்தப்பட்டுப் பின்னர் மறைந்திருந்ததெனக் கொள்ளவும் இடமுண்டாகையால் இதன் வரலாறு இன்னும் நீண்டதாகவேயிருக்கும்.

இவ்வாலயத்தின் அமைப்பானது திருக்கோயில் சித்திரவேலாயுதர் ஆலயம், கோவில் போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயம் என்பனவற்றின் கட்டிட அமைப்பை ஒத்ததாக இருப்பதால் சமகாலத்தில் இவை எழுப்பப்பட்டிருக்கலாம் எனக் கருதவும் இடமுண்டு. அத்தோடு தமிழகத்தில் சோழர் ஆட்சிக்காலத்திய கட்டிட வடிவினைக் கொண் டுள்ளதால் அக்காலத்தே அங்கிருந்து சிற்பிகளை வரவழைத்து இவ்வாலயத்தைக் கட்டியிருக்கலாம். இராஜ ராஜ சோழனுடைய ஆட்சிக்காலத்திலும் தொடர்ந்து இராஜேந்திர சோழருடைய ஆட்சிக்காலத்திலும் சோழருடைய ஆதிக்கம் பரவியும் சிவநெறி ஓங்கியும் இருந்தமையால் அவர்களது தொடர்பும் இவ்வாலயத்திற்குக் கிடைத்திருக்க முடியும். இது பற்றிய விரிவான ஆராய்ச்சி இன்றைய கால கட்டத்தில் மிகவும் பயனளிக்கத்தக்கதாகையால் இவ்வாலய வரலாற்றையும் இதனோடு ஒட்டிய பிற அம்சங்களையும் சிறப்பாக இங்குள்ள இரு தேர்களினதும் வடிவமைப்பு வேலைப்பாடு என்பன குறித்தும் விரிவாக ஆராய்வது சரித்திர ஆய்வாளர்களதும் குறிப்பாக இப்பகுதி வாழ் கல்விமான்களதும் கடப்பாடாகும்.

## தான்தோன்றிலிங்கத்தைப் பாருங்கள்

கொக்கட்டிச் சோலைக்கு வாருங்கள் – எங்கள்
தான்தோன்றி லிங்கத்தைப் பாருங்கள்
முத்தமிழ்ச் சொல்லெடுத்துப் பாடுங்கள் – ஈசன்
முத்தி யெல்லாம்தருவான் கேளுங்கள்

மட்டுநகர் வாவிதொட்டு முத்தமிடும் – அங்கே
வானுயர்ந்த சோலைநித்தம் குளிர்பரப்பும்
சத்தியத்தின் பெரும்தலைவன் வாழுமிடம் – அது
தமிழ்க்குலத்தின் வரலாற்றை காத்ததலம்

ஆவணி முதற்பிறையில் கொடியேற்றம் – கூடும்
அடியவ ருள்ளமெல்லா மீடேற்றும்
பௌர்ணமி போய்த்திங்களிலே நீராட்டம் –தூய
பக்திமணம் கமழுமீசன் எழில்கோட்டம்

சித்திரத் தேரில் ஐயன் திருஉலா – அடியார்
சேவிக்க தேவியுடன் அருள் உலா
கற்பூர ஆராத்தி ஒளிவிழா – கூத்து
காவடி கரகாட்டம் பெருவிழா


**கவிஞர் வெல்லவூர்க் கோபால்**

தொடர் கட்டுரை

# சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்

மு. நற்குணதயாளன்

## மூன்று



கடந்த இரண்டு இதழ்களிலும் சிவபுராணத்தின் முதல் முப்பது வரிகளையும் பொருளோடு பார்த்து அவற்றில் தொக்கி நின்ற மாணிக்கவாசகரின் சமூகப்பார்வையையும் அவ்வப்போ பார்த்துப் புரிந்து கொண்டோம்.
இம்முறை தொடர்ந்து வரும் இருபது வரிகளை நோக்கலாமென நினைக்கின்றேன்.

**உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற**
**மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்**
**ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே**
**வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா**
**பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி**
**மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே!**

இயமானன் என்பது உயிரானவன் என்பதைக் குறிக்கும். விமலன் என்பது மாசற்றவன் என்பதைக் குறிக்கும். பொய் என்று கருதப்படுகின்றவைகள் எல்லாம் என்னை விட்டகல அருள் தந்து எனக்குள்ளே மெய்ஞ்ஞானமாகத் திகழ்ந்தும் என் உள்ளத்தே ஓம் என்ற மந்திர வடிவாகவும் நிற்கின்ற நீ உயிரானவன், மாசற்றவன், ஆழ்ந்து அகன்று நுட்பமாக இருப்பவன்! வேதங்களால் ஐயா என அழைக்கப்படுகின்றவன் எனக்கூறுகின்றார். இங்கு வெய்யாய் தணியாய் ஆகிய இரு சொற்களும் மிக முக்கியமானவையாகும். வெய்யாய் என்றால் குற்றம் செய்வோரை நீதியின் பொருட்டு தண்டிப்பதாகக் கொள்ளலாம். தணியாய் என அன்பால் அடியவரை ஆட்கொள்ளுதல் எனவும் பொருள் கொள்ளலாம்.
இவ்விரண்டையும் பார்க்கும் போது மாணிக்கவாசகர் இரண்டு சமூகநீதிகளை மிக இயல்பாகக் கூறியிருப்பதைப் புரிந்து கொள்ளலாம்.
தொடர்ந்து....

**எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே**
**அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே**
**ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்து உலகும்**
**ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்**
**போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்**

எவ்விதமான அறிவுமற்ற என்னுடைய அறியாமையை நீக்குகின்ற ஞானப் பெருமானே! தோற்றமும் முடிவும் இல்லாது உலகங்கள் அனைத்தையும் நீயே உண்டாக்குகின்றாய்—நீயே காக்கின்றாய்— நீயே அழிக்கின்றாய்— நீயே அருள்கின்றாய் இப்படியான நீயே என்னைப் பிறவிக்குள்ளும் புகவைத்தாய். புக வைத்துதோடல்லாமல் உனக்குத் தொண்டு புரியவும் வைத்தாய்.

தொண்டு செய்வதன் மூலம்தான் நாம் ஆண்டவனை நெருங்கலாம் என்கின்ற அரிய கருத்தையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

**நாற்றத்தின் நேரியாய்! சேயாய்! நணியானே!**
**மாற்ற மனம் கழிய நின்ற மறையோனே!**
**கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச்**
**சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறிநின்று**
**பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்.**

நாற்றம் என்பதை வாசம் என்று கொள்ளலாம். ஆக, நாற்றத்தின் நேரியாய் எனும்போது மலரிலுள்ள வாசனை போன்று எதிலும் நிறைந்தவன் எனலாம். சேயாய் எனும்போது அன்பு அற்றவர்களுக்கு தூரத்திலுள்ளவன் எனலாம். நணியானே எனும்போது தன்னை அன்புடன் நெருங்கி வருபவர்களுக்கு அன்பு செலுத்துபவன் எனக் கொள்ளலாம். மாற்றம் என்ற சொல் புகழை அல்லது இசையைக் குறிப்பதாகக் கொண்டால் புகழ் இசையாகிய சொல்லும் மனமும் கடந்து நின்ற வேதப் பொருளே என்பது பொருந்தும். கறந்த பாலும் கரும்புச் சாறும் நெய்யும் கலந்ததுபோல சிறந்த அடியார்களுடைய உள்ளத்தில் தேனாக ஊறி நிற்பவன். இத்தகைய தன்மை வாய்ந்த எம் இறைவன் எங்களது பிறவித்தளையை அறுக்கும் தன்மை வாய்ந்தவன் என்கிறார்.

**நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த**
**மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை**
**மறைந்திட மூடிய மாய இருளை**
**அறம் பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டி**
**புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி**
**மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை.......**

ஐம் பூதங்களுக்கும் ஒவ்வொரு நிறமுண்டு. நிலம் பொன்னிறமானது. நீர் வெண்மையானது. தீ செம்மையானது. காற்று கருமையானது. ஆகாயம் நீலநிறமானது. இவ் ஐவகை நிறங்களையும் கொண்டவன் எம்பெருமான் என்கிறார். தொடர்ந்து உன்னைப் போற்றிப் புகழ்ந்து வணங்கிக் கொண்டிருக்கிற தேவர்களுக்கே மறைந்திருக்கிறாய். நான் செய்த கொடிய வினைகளின் காரணமாக என் நல்லறிவு ஆணவமாகிய இருளினால் மூடப்பட்டுள்ளது. மேலும் நல்வினை தீவினை என்னும் பாசக்கயிற்றால் கட்டுண்டுள்ளேன். வெளியே தோல்போர்த்தி அகத்தே எங்கும் புழுக்கழும் மாசும் மூடி மறைக்கப்பெற்ற, ஒன்பது துவாரங்களில் அழுக்குவடிய அமைந்த உடலை எனக்கு இருப்பிடமாகத் தந்துள்ளாய் என்று கூறுகிறார் மாணிக்கவாசகர்.

(இன்னும் வரும்......)

# கதிர்காமக்கந்தன்

இலங்கைத்தீவின் முக்கியமான யாத்திரைத்தலம் கதிர்காமம். இலங்கையிலும் தமிழ் நாட்டிலுமுள்ள முருக பக்தர்கள் தங்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது சென்று தரிசிக்க வேண்டும் என்று கருதும் தலம் இது. அடர்ந்த காட்டுப்பகுதியின் நடுவில் என்றும் வற்றாத மாணிக்ககங்கை என்கிற நதிக்கரையில் இத்தலம் உள்ளது. திஸ்ஸகிராம என்ற ஊரிலிருந்து பத்துமைல்.

இத் தலத்தில் விக்கிரக ஆராதனை கிடையாது. மூலஸ்தானத்திற்கு முன் பல திரைகள் தொங்குகின்றன. திரைகளுக்கு அப்பால் ஒருவரும் செல்வதில்லை. பூசாரிகள் மட்டுமே உள் நுழைகிறார்கள். ஒரு பேழையில் இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதை பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. திரைக்குத்தான் தீபாராதனை. உள்ளே ஒரு வேலும் இருக்கிறது. அது மரகதவேல் என்கிறார்கள். அதற்குத்தான் அபிஷேகம். கதிர்காமக் கோவில் ஒரு முக்கோணத்தின் பிந்துஸ்தானம் போல அமைந்துள்ளது. ஒரு கோண மூலையில் தேவயானைக்கு ஆலயமும் அமைந்துள்ளது. கதிர்காமத்திலும் காவடி எடுக்கும் வழக்கம் இருக்கிறது. சனிக்கிழமை காலை மட்டும் பூசை இல்லை. கோயில் ஓட்டுக்கட்டடம். பன்னிரண்டு ஆண்டுக் கொருமுறை ஓடு மாற்றுகிறார்கள்.

**நஜன்**

## தத்துவம் சொல்லும் சின்னக் கதைகள்

சிவாயன்

# புல்லுண்டு புகழ் தந்த கல்மாடு

ஈழத்திருநாட்டைப் போர்த்துக்கீசியர் கைப்பற்றிய காலம். கிழக்குப் பிரதேசத்தை முழுமையாகத் தங்கள் வசமாக்கும் பொருட்டு கண்ணில்பட்ட சிறப்புமிகு இந்து ஆலயங்களை அழித்தனர். மத வெறியில் போத்துக்கீசியர் மதம் கொண்டு அலைந்தனர்.

திருக்கோணேஸ்வரத்தைத் தகர்த்தெறிந்தார்கள்.

ஒரு நாள் மட்டக்களப்பு பிரதேசத்திற்கான தளபதி தன்பரிவாரங்களுடன் கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரத்தை முற்றுகையிட்டான்.

போத்துக்கீசிய படையைக் கண்ட மக்கள் அங்குமிங்கும் சிதறியோடினர். அப்பிரதேசமே அல்லோல கல்லோலப்பட்டது.

ஆலயக்குருக்களோ அஞ்சி நடுங்கினார்.

அவருக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. கலங்கிப்போய் எம்பெருமானை வணங்கியபடி நின்றார்.

ஆலயத்தின் உள்வீதியைச் சுற்றிப் பார்த்த தளபதியின் கண்களில் கல்லால் செய்யப்பட்ட மாடு தென்பட்டது.

நடுங்கிக் கொண்டிருந்த அர்ச்சகரைக் கூப்பிட்டான்.

"ஏ குருக்கள்! இந்த மாடு என்ன புல்லைத் தின்னுமா?" என்று கேட்டான்.

குருக்களுக்கு அவன் கூறியது புரியவில்லை. எனினும் "ஆமாம்" என்று தலையாட்டி வைத்தார்.

"என்ன புல் தின்னுமா? எங்கே கொடு பார்க்கலாம்" என்றான் அவன்.

குருக்களுக்கு இப்போதுதான் தன் பதிலின் விபரீதம் புரிந்தது. என்ன செய்வது தான் தினமும் பூசை செய்து வணங்கும் எம்பெருமானை வணங்கி உள்ளத்துள் அழுதார். எம் பெருமான் தான் கருணைக்கடலாயிற்றே!

"ஐயா இந்த மாடு ஒரு நாளைக்கு ஒரு தரம் தான் புல்லைத் தின்னும். இன்று காலையே அது சாப்பிட்டுவிட்டது. இனி நாளைக்காலைதான் உண்ணும்" என்ற சமயோசிதமான பதிலை அர்ச்சகரினூடாகத் தளபதிக்கு எம்பெருமான் தெரிவித்தார்.

சிறிது நேரம் யோசித்த தளபதி,

"சரி நாளைக் காலைவருவேன். இந்த மாடு புல்லைச்சாப்பிட வேண்டும் அப்படி நடக்காவிட்டால் உமது தலை நிலத்தில் உருளும்" என்று கூறிவிட்டுப் போய்விட்டான்.

குருக்கள் ஓடிச்சென்று எம்பெருமான் பாதங்களில் விழுந்தார். அழுதார். உனக்கு இவ்வளவு காலமும் இதயசுத்தியோடு பூசைசெய்தமைக்கு கைமாறா இது என்று கேட்டழுதார்.

மறுநாள் காலை விடிந்தது.

ஏகப்பட்ட கூட்டம்.

தங்களோடு அன்பாக இவ்வளவு காலமும் பழகிய குருக்கள் இறக்கப்போகின்றாரே என்ற கவலையோடு மக்கள் நின்றிருந்தனர்.

தளபதி பரிவாரங்களோடு வந்து சேர்ந்தான்.

குருக்கள் ஒரு பக்கத்தில் புல்லோடு நின்றார்.

"ம்....கொண்டு சென்று புல்லைக்கொடும்" என்று தளபதி ஆணையிட்டான்

குருக்கள் புல்லை நீட்டுகின்றார்.

என்ன ஆச்சரியம்!

கல் மாடு அசைந்து புல்லை உண்ண ஆரம்பித்தது.

அரோகரா கோஷம் அலை அலையாக எழுகின்றது.

மக்கள் கண்களில் ஆனந்தக்கண்ணீர் சொரிகின்றது.

தளபதி குருக்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்குகின்றான்.

எம்பெருமான் பெருமை தான் என்னே!

( இந்நிகழ்ச்சிக்குப்பின்னர் எந்த ஒரு இந்துக்கோவிலும் போத்துக்கீசியரால் இடிக்கப்படவில்லை எனச்சரித்திரம் கூறுகின்றது.)

கலசம் வாசகர்களிடமிருந்து இப்பகுதிக்கு கதைகளை எதிர்பார்க்கிறோம். சிரமம் பாராது அன்போடு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி

**Editor 'KALASAM'**
**42, Stoneleigh Road**
**Clayhall**
**Ilford**
**Essex**
**IG5 OJD**

# நீரிலன்றி .... நிலத்திலும் !!

தரையிலே எங்காவது ஆறுகள் சங்கமிப்பதுண்டா? கடலிலேதான் ஆறுகள் சங்கமிக்கின்றன. 'பிரயாகை' என்ற புண்ணிய தலத்திலேதான் மூன்று நதிகள் சங்கமிக்கின்றன என்றெல்லாம் எண்ணுவீர்கள். அங்கே கங்கை, யமுனை, சரஸ்வதி என்ற புண்ணிய நதிகள் மூன்றும் கலக்கின்றன என்பது உண்மைதான். அதனால் அந்தப் புனித சங்கமம் திரிவேணி (திரி–மூன்று, வேணி–நதி) சங்கமம் என்று வழங்கப்படுவதும் உண்மைதான். ஆனால், தரையிலே, ஒன்றல்ல ஏழு இடங்களிலே, மஹா புனிதமான திரிவேணி சங்கமம் நிகழ்கிறதே!; அறிந்ததுண்டா?; சென்று நீராட வேண்டும் என்று ஏங்கியதுண்டா?

திரிவேணி சங்கமத்திலே செந்நிறக் கங்கை வெண்ணுரை ததும்பத் தண்ணென்று பாய்கிறது. கரிய நிறநீர் யமுனை செந்நிறக் கங்கை நீரைத் தன்னுடைய திரைக் கரங்களாலே தழுவிக் கலக்கிறது.

சரஸ்வதி ஊற்றெடுப்பதெங்கே?,; ஓடிப்பின் கடலிற் கலப்பதெங்கே? கண்டார் எவருமில்லை. எனவே அந்த நதிமூலம் அறிந்தாரும் எவரும் இல்லை. சரஸ்வதி அந்தர்வாஹினியாய் – நிலத்தடி நீர்ப்பெருக்காய் – பிரயாகையிலே கலக்கிறது என்பது ஐதிகம்*. ஆனால், தரையிலும் இப்படிக் கலக்கும் நதிகள் உள. அவையும் கங்கை,யமுனை, சரஸ்வதியே என்று கூறினால் வியப்பாக இருக்கிறதல்லவா? இப்படிப் புதிர்மேற் புதிர் போட்டு நமையெலாம் கதிகலங்கும்படி செய்பவர்கள் நமக்கெல்லாம் நன்கு பரிசயமான குமரகுருபர சுவாமிகளே!

**க. உமாமகேஸ்வரன்**

சுவாமிகளோ காசிவாசி. புனித கங்கையிலே பன்முறை நீராடும் பாக்கியம் படைத்தவர்கள். திரிவேணி சங்கமத்தையும் அவர்கள் விட்டுவைத்ததில்லை. அத்தகையவர்கள் இப்போது திருவாரூர்த் தியாகராஜப்பெருமான் சந்நிதியிலே நிற்கிறார்கள், பெருமானின் பேரழகுப் பொலிவிலே திளைத்துச் சொக்கியும் விடுகிறார்கள். தியாகேசப்பெருமானின் அருட்பிரவாகத்திலே அமிழ்ந்தியதும், ஆகா! திரிவேணி சங்கமத்திலே முழுகித் திளைப்பதாற் பெறும் ஈடிணையற்ற இன்ப அனுபவத்தையும் விஞ்சிய பேரானந்தானுபவத்தை அல்லவா எய்திவிட்டோம் என்று எக்களிப்பையும் எய்திவிடுகிறார்கள்.

அப்பனும் அம்மையும் அவரருட் சேயாகிய சேயோனும் ஒன்றிணைந்த சோமாஸ்கந்த மூர்த்தமாகிய தியாகராஜப் பெருமானைத் தரிசித்த பேரானந்தானுபவம் திரிவேணி சங்கமத்தை நினைவுகூரவைத்ததிலே வியப்பேதும் இல்லை. அங்ஙனம் நினைவுகூர நேர்ந்ததற்கான ஏதுக்களைச் சுட்டிக்காட்டவும் சுவாமிகள் தவறவில்லை.

சிவன் தன் திருமேனி முழுவதும் வெண்ணீற்றை உத்தூளனமாகத் தரித்துள்ளான். காடுடைய சுடலைப் பொடி பூசி எம் உள்ளங்கவர் கள்வனான அவன் திருமேனியோ செம்மேனி. எனவே வெண்ணுரை பொங்கப் பாயும் செந்நிறக் கங்கையே சிவன்.

"அருளது சத்தியாகும் அரன்றனக்கு" என்பர் அருணந்தி சிவாசாரியார். அரனின் அருட்பிரவாகமே அம்மை. எனவே கரிய (நீர்த்திரைக்) கரங்களாலே கங்கையை (சிவனை)த் தழுவும் – அரனருட்பிரவாகமாய் அவனடியார் உள்ளமெனும் பள்ளத்திலே பாயும் – யமுனையே கௌரி.

குமரன் எத்தகையன்? "ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி" என்பர் நக்கீரர். தொலைவிலே இடையீடுபடாது ஒளிரும் ஜோதி என்று மட்டுமே கூறியதோடு மேலே எதுவுமே பேசாது கையை விரித்துவிடுகிறார் அவர். மனம் வாக்கு என்ற எல்லைகளை எல்லாம் தாண்டி அப்பாலுக்கு அப்பால் ஆனவன் – வாக்குமனாதீதன் – குமரன். எனவே அந்தர்வாஹினியான – உண்முகமாய் அன்றி வெளியே அறியப்படாத – வாணி(சரஸ்வதி) நதியே குமரன்.

ஆஹா! "ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்த" சங்கமமாக – திரிவேணியாக – அல்லவோ சோமாஸ்கந்த மூர்த்தி (ச + உமா = சோமா + ஸ்கந்தன் = சோமாஸ்கந்தன் – உமையொடுங் குமரனொடுங் கூடியவன்) எழுந்தருளித் திருவருள் பாலிக்கின்றான். கிடைத்தற்கரிய இத்

*விஞ்ஞானபூர்வமாக ஆராய்ச்சிபண்ணியவர் ஒருவர். நிலத்தடியால் வரும் நீர்ப்பெருக்கம் திரிவேணி சங்கமத்திலே கலப்பதாகத் தோன்றுகிறது என்று எழுதியிருந்ததை, எங்கோ நான் படித்தது என் நினைவில் எழுகிறது. – கட்டுரையாளன்

திரிவேணிசங்கமத்திலே தீர்த்தமாடிப் பிறவித்துயர் என்ற அழுக்கைப் போக்கித் தூயராவோம்!; வாரீர்!

தாம் பெற்ற இன்பத்தை அனைவரும் பெற்றுவிடவேண்டும் என்ற அளப்பருங் கருணையினாலே இப்படிக் கூவியழைக்கின்றார்கள்; ஆற்றுப்படுத்துகின்றார்கள்; அருளே உருவான குமரகுருபர சுவாமிகள்.

*தம்மேனி வெண்பொடியால் தண்ணளியால் ஆரூரர்*
*செம்மேனி கங்கைத் திருநதியே - அம்மேனி*
*மானே யமுனையந்த வாணிநதி யுங்குமரன்*
*தானே குடைவேம் தனித்து.*

சோமாஸ்கந்தமூர்த்தி பூமிக்கெழுந்தருளிய வரலாறு (கந்தபுராணம் - கந்தவிரதப்படலம், பா49-124) சுவையானது.

முசுகுந்தச் சக்கரவர்த்தி தேவேந்திரன் அழைப்பை ஏற்றுத் தேவர் உலகு சென்றான்; படைத்துணையானான்.இந்திரன் பகைவர் இறந்தொழிந்தனர். இதயம் பூரித்த இந்திரன், "முசுகுந்தா! நீ விரும்புவது எதுவானாலுங் கேள்; தருகிறேன்" என்றான்.

திருமால் பூசித்த சோமாஸ்கந்த மூர்த்தியைத் திருமாலிடமிருந்து பெற்ற இந்திரன் தினந்தோறும் பூசித்துவந்தான். அந்தமூர்த்தியின்பால் ஆராமை மிக்குத் தன்னையே இழந்துவிட்ட முசுகுந்தன் " நீ வழிபடும் சோமாஸ்கந்த மூர்த்தியே எனக்கு வேண்டும்; தருக!" என்றான்.

இப்படியொரு வேண்டுகோள் முசுகுந்தனிடமிருந்து வரக்கூடும் என்று எதிர்பார்க்காத இந்திரன் மனங்கலங்கி மயங்கினான். தன் உபாசனா மூர்த்தியான சோமாஸ்கந்த மூர்த்தியைப் பிரிய அவன் மனம் இடந்தரவில்லை. எனவே ஒரு சூழ்ச்சி செய்தான். தன் வழிபடு மூர்த்தியே போன்ற ஆறு சோமாஸ்கந்த மூர்த்தங்களைத் தேவ கம்மியனைக் கொண்டு அமைப்பித்தான். ஏழு திருவுருவங்களையும் ஓரிடத்திலே எழுந்தருளப் பண்ணினான். "முசுகுந்தா! உனக்குப்பிரியமான திருவுரு எதுவோ அதனை நீ எடுத்துக்கொள்" என்றான்.

ஏழில் எது திருமாலும் தேவேந்திரனும் பூசித்த திருவுரு? முசுகுந்தன் திகைத்தான். மனமுருகிச் சோமாஸ்கந்த மூர்த்தியைத் தியானித்த வண்ணம் ஏழு திருவுருவங்களையும் மாறிமாறி உற்று நோக்கினான்.

முசுகுந்தன் பத்திக்கிரங்கிய தியாகேசப்பெருமான் திருவிளையாடல் ஒன்றினை உன்னினான். முசுகுந்தனுக்கு மட்டும் புலப்படும்படி தம்முடைய திருக்கண்களிலே ஒன்றைச் சிறகணித்துச் சமிக்ஞை செய்தான். அவ்வளவுதான். "அதோ! அந்தத் திருவுருவே எனக்கு வேண்டும்" என்று உரைதடுமாற உரோமஞ்சிலிர்ப்ப மகிழ்ச்சிப் பெருக்காற் கூவியவனாய்ச் சாட்சாத் சோமாஸ்கந்த மூர்த்தியைத் தன் கரங்களிலே முசுகுந்தன் எழுந்தருளப் பண்ணிவிட்டான். பாவம்! இந்திரன், இனி எதற்கெனக்கு எஞ்சிய திருவுருவங்கள் ஆறும் என்றெண்ணி இரங்கியவனாய், " ஏனைய திருவுருவங்களும் உனக்கே; எடுத்துச்செல்!" என்றான். முசுகுந்தன் பூவுலகுக்கு ஏழு சோமாஸ்கந்த மூர்த்தங்களைக் கொணர்ந்தான். அவற்றுளே, திருமாலும் இந்திரனும் பூசித்த மூர்த்தியே தியாகேசராய் - வீதிவிடங்கராய்த் திருவாரூரிலே எழுந்தருளி அஜபா நடனம் ஆடியவண்ணம் அனைத்துலகையும் ஆட்கொண்டருளி அருள்பாலிக்கிறார். ஏனைய மூர்த்திகள் திருநாகைக்காரோணம், திருநள்ளாறு, திருக்காறாயல், திருக்கோளரியூர், திருவான்மியூர், திருமறைக்காடு ஆகிய தலங்களிலே எழுந்தருளித் திருவருள்பாலிக்கின்றனர். இந்த ஏழு சோமாஸ்கந்த மூர்த்தி சந்நிதிகளுமே நீரிலன்றி நிலத்திலே நமக்கு வாய்த்த திரிவேணி சங்கமங்கள். இவற்றுள்ளும் ஒப்புயர்வற்ற திரிவேணிசங்கமம் திருவாரூர்த் தியாகேசர் சந்நிதியே! தியான தீர்த்தமாடித் தீர்த்தன் அருள்பெற்றுப் பிறவிப்பிணி போக்கிட முந்துவோம்!

### பூந்துருத்தி நம்பிகாடநம்பி திருவிசைப்பா

திருவாரூர்


பண் -பஞ்சமம் இராகம்- ஆஹிரி / ஆனந்தபைரவி

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்குந் தேவர்காள் இவர்தம்
திருவுரு விருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடங்குலா வினரே.

தொடர்கட்டுரை

# இந்துசமயம்

க. குணரத்தினம்



## பாசம்

ஆணவம், கன்மம் மாயை எனப் பாசம் மூன்று விதமாயிருக்கும். இம்மூன்றும் ஆன்மாக்களோடு சகசமாய் நிற்கும். இவற்றை மும்மலங்கள் என்பர். சிவனை அடைவதற்குத் தடையாக உள்ளவை இம்மலங்களே.

## ஆணவம்

ஆணவமலம் அநாதியானது அழிவில்லாதது. அதன் ஆற்றலை ஒடுக்க முடியுமேயன்றி இல்லாமலே செய்துவிட முடியாது. பதி, பசு, பாசம் என்பனவற்றின் உண்மைகளை அறியவொட்டாமல் ஞானத்தை மறைத்து நிற்பது ஆணவமலம். "யான்" என்ற அகப்பற்றும் "எனது" என்ற புறப்பற்றும் ஆணவத்தின் பாற்பட்டவையே. ஆணவம் ஆன்மாவின் அறிவை மறைக்கிறது. அதேசமயம் தன்னையும் மறைத்துத் தன் செயலையும் மறைக்கிறது. இதனால் ஆணவம் என்று ஒன்று உண்டு என்பதை உணரமுடிவதில்லை. ஆணவமே மயமாகிக் கிடக்கும் நிலையில் ஆன்மாவுக்கு அறிவு இருப்பதில்லை. எனவே இச்சை செயல் ஆகியவையும் இல்லை. அது ஒடுங்கிக் கிடக்கிறது.

## கன்மம்

கன்மம் என்பதும் கருமம் என்பதும் ஒன்று. கன்மம் என்றால் வினை அல்லது செயல் என்பது பொருள். செயலுக்கு ஒரு நோக்கமுண்டு பலனுமுண்டு. அப்பலனை அனுபவித்தலும் ஒரு செயல். எனவே செயல், நோக்கம், பலன் எல்லாம் கன்மத்துள் அடங்கும். வினைகளைப் பழவினை, நிகழ்வினை, எதிர்வினை என மூன்றாக வகுக்கலாம். வினையை அதன் தன்மையைப் பொறுத்து நல்வினை, தீவினை எனலாம். ஒரு பிறப்பில் ஒருவன் செய்யும் செயல்களின் பலன்கள் அனைத்தும் அந்தப் பிறவியிலேயே அனுபவிக்க முடியாமற்போய்விடலாம். அதனால் எஞ்சியுள்ள பலன்களை அனுபவிக்க மேலும் ஒரு பிறப்பை எடுக்கவேண்டி ஏற்படும். அப்பிறப்பில் முன்னைய பிறப்பின் பலனை அனுபவிப்பான். அப்போது வேறும் பல வினைகள் புரிவான். அவ்வினைகளை அனுபவிக்க மீண்டும் பிறக்க வேண்டி நேரிடும். கன்மம் காரணமாகப் பிறப்பும், பிறப்புக் காரணமாகக் கன்மமும் சங்கிலித் தொடராக வந்துகொண்டேயிருக்கும். தமிழிலக்கியங்கள் கன்மத்தை ஓம் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றன. சிலப்பதிகாரத்தில் களவு செய்யாத கோவலன் கள்வனெனக் கொலையுண்டது முற்பிறப்பில் அவன் செய்த ஊழின்பயன் என்ற கூறுவர். செல்வர், வறியவர், இன்பம், துன்பம், பாபம், புண்ணியம் முதலான பலவற்றிற்கும் காரணமாவது கன்மமலமே. இப்பிறப்பில் ஒருவனுக்கு நிகழ்வன யாவும் முற்பிறப்பில் விதிக்கப்பட்டுவிட்டனவென்றால் அவன் மீட்சி பெற வழியில்லையா? பழவினையை அனுபவிக்கும் அதேவேளையில் முயற்சிக்கும் இடம் உண்டு. இரு அறிஞர்கள் உதாரணங்கள் மூலம் இதனை விளக்கினர். கடன்பட்டவன் கடனை அடைப்பதில் தனது உழைப்பு செலவாகிறதே என நினைத்து உழைக்காதிருந்தால் அவன் கடன் மேலும் பெருகும். தொடர்ந்து உழைத்தால் கடன் நீங்கி பணத்தைச் சேர்க்கவும் வாய்ப்பு உண்டு. இவ்வாறு கூறுகின்றார் சைவப்பெரியார் சிவபாதசுந்தரம். பழவினையை சீட்டாட்டத்தில் கிடைக்கும் சீட்டுக்கு ஒப்பிடுகின்றார் டாக்டர் இராதாகிருஷ்ணன். ஒருவனுக்குக் கிடைக்கும்

சீட்டுக்கள் அவன் விருப்பப்படி அமைவதில்லை. மோசமானவையாகக் கூட இருக்கலாம். ஆனால் அவன் திறமையால் விளையாட்டில் வெற்றியடையும் வாய்ப்பு இருக்கிறது. எனவே பழவினையைத் தெரிந்தெடுக்க அதிகாரம் இல்லாவிடினும் அதனை வைத்துக்கொண்டு மேலே ஆக்குவதோ அழிப்பதோ யாவும் மனிதன் கையிலே உள்ளது.

தீவினையின் பயனான பாபத்தை நல்வினையின் பயனான புண்ணியம் நீங்கமாட்டாது. ஒவ்வொரு வினைக்குமுரிய பயனை அனுபவித்தே தீரவேண்டும். அவரவர் செய்த நன்மை தீமைகளின் பலனை அவரவரே அனுபவித்தல் வேண்டும். அதிக புண்ணியம் செய்த ஆன்மா தனது புண்ணியத்தில் ஒரு பகுதியை அதிக பாபம் செய்த ஆன்மாவுக்குக் கொடுத்து அவ்வான்மாவை அப்பாப பலன்களை அடைவதிலிருந்து நீக்க இயலாது. தீவினையைச் செய்தவன் துன்பத்தை அனுபவிக்கப் பிறப்பது போல் நல்வினையைச் செய்தவன் இன்பத்தை அனுபவிக்கப் பிறக்கிறான். தீவினையை நீக்கி நல்வினையை மட்டும் செய்வது பிறப்பை ஒழித்து வீடுபேற்றை அடைய வழியாகாது. நல்வினையை "நான் செய்தேன்" என்று எண்ணாது அதன் பலனையும் எதிர்பாராது எல்லாம் திருவருள் என்ற கருத்தோடு செய்வதே பற்றற்றவினை. இதனையே சைவசித்தாந்தம் மேலான வினையாகக் கொள்கின்றது. நல்வினைப் பயனில் விருப்பும் தீவினைப் பயனில் வெறுப்பும் கொள்ளாத ஒரு நிலையை இருவினையொப்பு என்பர். கன்ம பலன்கள் நம்மை அணுகாமற் செய்வதற்கு இதுவே வழி. இறைவனுடைய அனுக்கிரகம் இருந்தால் கன்ம விதிகளிலிருந்து விதிவிலக்கு உண்டு.

## மாயை

நித்தியமானது. வடிவமற்றது. அறிவற்ற சடப்பொருள். உடல்,உலகம், ஆகியவற்றின் உற்பத்திக்கும் ஒடுக்கத்துக்கும் காரணம் மாயை. உயிர்களுக்கு உடம்புகளையும் உலகையும் அனுபவத்திற்குரிய பொருட்கள் அனைத்தையும் ஆக்கிக் கொடுப்பது. அதே சமயம் மயக்குவது. இவ்வுலகின் அம்சங்கள் யாவும் சூக்குமப்பொருளாகிய மாயையுள் அடங்கிக்கிடக்கின்றன. இம்மாயையை இறைவன் தனது சக்தியினால் இயக்க இதிலிருந்து முப்பத்தாறு தத்துவங்கள் தோன்றுகின்றன. அவை பஞ்ச பூதங்கள், உடலிலுள்ள சடப்பொருள்கள், புத்தி, சித்தம், அகங்காரம் போன்றவை. ஆணவமலமாகிய இருளைப் போக்கவல்லது மாயாமலமே. பாசநோய்க்கு மருந்தாவன தநு,கரண, புவன, போக பாக்கியங்கள்

இவை முறையே உடல்,கருவி, இடம், அனுபவம் என்பன. இவைகளைக் கொண்டு, வாழும் வழியைத் தேடிக்கொள்ளுமாறு இறைவன் இவைகளை உயிர்களுக்கு அருளினான்.

## ஆன்மாவின் மூன்று நிலைகள்

ஆன்மா அனாதியாக ஆணவத்துடன் சேர்ந்துள்ள போது அதற்கு அறிவு இல்லை. இது இருள் நிலை எனப்படும். உடலிலும் பின் உலகிலும் புகுந்த பின் அறிவு கிடைக்கிறது. அந்த அறிவு பூரண அறிவு அல்ல. நிலையற்றனவும் துன்பத்தைத் தருவனவுமாகிய உலகபோகங்களை நிலையுள்ளன எனவும் இன்பம் தருவன எனவும் கருதி நிற்கும் ஒரு மயக்க நிலை. மருள் நிலை எனப்படும். அறியாமையும் குறைவான அறிவையுமுடைய இருநிலைகளும் நீங்கி பூரண அறிவைப் பெறும் நிலையை அடைய இறைவனின் அருள் வேண்டும். இது அருள் நிலை எனப்படும்.

## ஆன்மாவின் இலட்சியம்

தன்னை அறியாமையில் அமிழ்த்தி அல்லற்படுத்தும் ஆணவமலத்தினதும் அதன் தொடர்ச்சியாக எழும் கன்மம் மாயை ஆகிய ஏனைய மலங்களினதும் பிடியிலிருந்து தன்னை விடுவித்துச் சத்தாகியதும் சித்தாகியதும் ஆனந்தமுமாகிய பரம்பொருளைச் சாருவதே ஆன்மாவின் இலட்சியமாகும்.

## இலட்சியத்தை அடையும் மார்க்கம்

இறைவனது துணை இருந்தாலொழிய இந்த இலட்சியத்தை அடையமுடியாது. இறைவனது துணையைப் பெறுவதற்கு சரியை கிரியை, யோகம் ஞானம் ஆகிய நான்கு வழிகள் உண்டு. சரியை என்பது ஆன்மா இறைவனுக்குத் தொண்டனாகப் பணிபுரிதல், கோவில் வழிபாடு, கோவில் தொண்டுகள், அன்னதானம் அளித்தல், அனாதை விடுதி அமைத்தல், சமயக்கல்வி, இலவசக்கல்வி வசதிகள் செய்தல், இதனுள்

அடங்கும். இதனை தாசமார்க்கம் என்பர். இதன் பலன் இறைவன் இருக்கும் இடத்தை அடைதல்.

## கிரியை

இறைவனை அர்ச்சித்தல், போற்றுதல், இதனை சற்புத்திர மார்க்கம் என்பர். ஆன்மா புத்திரனது நிலையையொத்த நிலையை அடைதல் வாய்மைபேசுதல். அன்பு பாராட்டுதல். பிறர்க்கு இரக்கம் செய்தல் என்பனவும் இதனுள் அடங்கும். பலன் ஆன்மா இறைவனுக்கண்மையை அடைதல்.

## யோகம்

யோகம் என்பது நண்பனின் நிலை. இதனைச் சகமார்க்கம் என்பர். பக்தன் தனது மனதை ஒரு முகப்படுத்தி வெளி உலகை மறந்து இறைவனோடு இணைந்துவிடுவது. இயமம், (யோகநிலை)அகிம்சை, உண்மை, கள்ளாமை, பிறர்பொருள் விரும்பாமை, பிரமச்சரியம் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க உதவுகிறது. பலன் இறைவனது ரூபத்தைப் பெறுதல்.

## ஞானம்

இறைவனைப் பற்றிய ஞானம் பெறுதல். இது சன்மார்க்கம் எனப்படும். பலன் இறைவனோடு இரண்டறக்கலத்தல்.

இந்த மார்க்கங்களை முறையாக அனுட்டித்தால் இருவினையொப்பு நிலையேற்படும். விருப்பு வெறுப்பற்ற நிலை. ஓட்டையும் பொன்னையும் சமமாகக் கருதக்கூடிய நிலை. மலங்கள் நீங்குவதற்கு இது அறிகுறி. இதேசமயம் இறைவனது அருட்சக்தியும் ஆன்மாவின் மேல் விழும். இறைவனது அருளின் துணை கொண்டே இறைவனைக் காணமுடியும். பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு அவற்றின் பக்குவங்களுக்கேற்ற கோலத்தோடு இறைவன் தோற்றி முத்தியை நல்குவான். இந்த உடலோடு இருந்தபடியே முத்தியை அடைந்தவர் சீவன் முத்தர்கள் எனப்படுவர். சீவன் முத்தர்கள் மற்றைய ஆன்மாக்களுக்கு வழிகாட்டியாயிருப்பர்.

## முத்தி

துன்பம் துளியும் இல்லாத பேரின்பமே மயமான நிலையாகும். இம்முத்தியிலே ஆன்மா இறைவனோடு இரண்டறக்கலந்த போதும், தன்தனி இயல்பை முற்றாய் இழந்துவிடுவதில்லை. இந்நிலையைத் தாள் தலை என்பர். தலை ஆன்மாவையும் தாள் இறைவனையும் குறிக்கும். அதாவது இறைவனது திருவடிகளில் ஆன்மாவின் தலை பொருந்துகின்றது. தமிழ் இலக்கண விதிப்படி தாள் + தலை =தாடலை தாடலை என்பதனை இரு சொற்கள் எனக் கொள்ளவும் முடியாது, ஒரு சொல் எனக் கொள்ளவும் முடியாது. குமரகுருபரசுவாமிகள் சைவசித்தாந்தத்தைப் பற்றி பின்வருமாறு பாராட்டுகின்றார்.

"ஓரும் வேதாந்தமென்னும் உச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி
சைவசித்தாந்தத் தேனமுது"

மேனாட்டுத்தத்துவஞானிகள் பலரையும் சைவசித்தாந்தம் கவர்ந்துள்ளது.

"இந்தியாவிலுள்ள மதங்கள் அனைத்திலும் சைவசித்தாந்தமே மிக மேம்பட்டது என்பதில் ஐயமில்லை" என்கிறார் ஜியு.போப்.

சைவசித்தாந்தம் இந்திய சிந்தனைகளினதும் உணர்வினதும் சிகரம்" என்கிறார் கௌடி.

சைவசித்தாந்தம் காலத்தால் பழமையாக இருந்தாலும் மிகவும் புது நெறியாகவும் காட்சியளிக்கின்றது. அறிவியல் உணர்வுக்கு இயைந்ததாக அனுபவத்திற்கு உகந்ததாக, நம்பிக்கைக்கும் நல்வாழ்வுக்கும் ஏற்றதாக

(இன்னும்வரும்..........)

### திருமால் பெருமை

#### திருமாலின் ஐவகை நிலைகள்

**பரம்** : வைகுந்தத்தில் முக்தர்கள், கருடன், அனந்தன் முதலிய நித்யர்கள் சூழ எழுந்தருளியுள்ள நிலை

**வியூகம்** : முத்தொழில் புரியும் உலக மக்களுக்கு நன்மைதந்து தீமை போக்கிப் பாதுகாத்தருளவும் வாசுதேவனாகத் திருப்பாற்கடலில் விளங்கும் நிலை.

**விபவம்**: அவதாரங்கள்

**அந்தர்யாமித்துவம்** : எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிலும் உட்கலந்து நின்று இயக்கி நிற்பவனாகத் திகழும்நிலை.

**அர்ச்சாவதாரம்** : திருமேனி, திருநாமம், கொண்டு ஆலயத்தும் இல்லங்களிலும் அன்பர்கள் விருப்பத்திற்கேற்ப எழுந்தருளியிருக்கும் நிலை.

# ஐயம் தீர்க்கும் அறிவுரைகள்

## சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள்

**அபிஷேகம் முடிந்து சுவாமிக்கு முன்னால் நைவேத்தியம் வைக்கின்றோம். அந்தப் பிரசாதத்தைச் சுவாமி சாப்பிடுவதில்லையே? பின்னர் ஏன் படைக்கிறோம்?**

பொதுவாகக் கோயிலிலே செய்யும் கிரியைகளெல்லாம் கடவுளுக்காக அல்ல. கடவுள் வடிவிலே இருக்கும் சக்திக்காகத்தான். விக்கிரகங்கள் செய்யும்போது ஒன்றை யானை முகத்தோடு செய்து விநாயகன் என்கிறோம், இன்னொன்றைக் கையிலே வேல் கொடுத்து முருகன் என்கிறோம். ஆனால் இருப்பதோ எல்லாமே ஒரு கல்தான். அந்தக் கல்லிலே விநாயகருடைய சக்தி, முருகனுடைய சக்தி என்றெல்லாம் வருவது நாம் செய்கின்ற பூசைகளினாலும் உச்சரிக்கின்ற மந்திரங்களினாலும் மட்டுமே. எனவே பூசைகள் செய்யச் செய்ய அங்கு தெய்வசக்தியும் அதிகரிக்கின்றது. அருள் பெருகுகின்ற அந்த சக்திக்கு, உலகிலே நமது உடம்பின் சக்திக்கு என்னென்ன தேவையானவையோ அவை எல்லாவற்றையும் அர்ப்பணிக்கிறோம். அப்போதுதான் அந்த சக்தி நமது உடம்பிலே வந்து புக வாய்ப்பிருக்கும். கோயிலுக்குள்ளே சட்டை போடக்கூடாதென்பதற்கும் இதுதான் காரணம். கோயில் விக்கிரகத்திலிருந்து எழும் சக்தி நமது உடம்பிலே சில சில குறிப்பிட்ட இடங்களிலே படவேண்டும். அதனாலேயே குறிப்பிட்ட ஆடைகளைக் கோயிலுக்குப் போகும்போது அணியவேண்டும். பிரசாதத்தைச் சூடு ஆறுமுன் அர்ப்பணிப்பதற்கும் காரணம் அந்தச் சக்தி வெளியேறுமுன் அற்பணிக்கவேண்டும் என்பதனாலேயே.

**பிரசாதத்தை அர்ப்பணித்தபின் அர்ச்சனை செய்கிறோம். அர்ச்சனை செய்வதன் பலன் என்ன?**

கருவறையிலே உண்டாகின்ற தெய்வீகசக்தி எல்லா மனிதர்களுக்கும் சேரவேண்டும் என்பதே நோக்கம். அதனாலேயே இந்த வழிபாட்டுமுறைகள் எல்லாம் வந்தன. அர்ச்சனை மட்டுமென்ன? கர்ப்பூரம் ஏன் காட்டுகிறோம்? தீர்த்தம் ஏன் குடிக்கிறோம்? என்று எல்லாவற்றுக்குமே ஒரே பதிலாகச் சொல்வோம்.

சிலையிலிருந்து தெய்வச் சக்தி தொடர்ந்து வருகின்றது. அது குறையக்கூடாது என்பதற்காகவே ஆகாய சம்பந்தமாக மந்திரங்களை உச்சாடனம் பண்ணுகிறோம். அந்தக்காலத்திலே கோயில்களிலே ஒரு குறிப்பிட்ட காலம் வேதம் ஓதுவார்கள். பின் தேவார திருவாசகங்கள் ஓதுவார்கள். அப்படி எந்நேரமும் கோயில் ஒலி மயமாகவே இருக்கும். வருகின்ற பக்தர்களும் அர்ச்சனை மூலம் தமது கோரிக்கைகளைக் கடவுளிடம் விடுக்கிறார்கள். இப்படியெல்லாம் நடைபெறுவதால் அந்த சக்தி மேலுந் தூண்டப்படுகிறது. அசையாமல் இருக்கும் ஒருவர் மேல் நாம் ஒரு புஷ்பத்தைப் போட்டால் அவர் உடம்பு சிலிர்க்கும். அதுபோலவே அர்ச்சனை செய்யும்போதும் சிலைமீது விழுகின்ற புஷ்பங்கள் ஓர் அதிர்வை உண்டாக்கும். அப்போது கர்ப்பூர ஆரத்தி செய்கிறோம். மந்திரம், பூ, கர்ப்பூரம் எல்லாமே பஞ்ச பூத சம்பந்தமானவை. அவற்றையெல்லாம் கொண்டுவந்து அடியார்களுக்குக் கொடுக்கிறோம். கண் ஒளியோடு சம்பந்தமானது என்பதாற் கர்ப்பூரத்தைக் கண்ணில் ஒற்றுகிறோம். தீர்த்தம் நீர்,பிரசாதம் பிருதுவி. இவை இரண்டையும் வாயிலே இடுகிறோம். பிரசாதம் கொடுக்கும்போது ஆகாச சம்பந்தமான மந்திரம் சொல்கிறோம்.ஆக தெய்வ சம்பந்தமான எல்லாம் பஞ்சபூதச் சேர்க்கைகளே! அவையாவும் மனிதர்களாகிய நமக்குக் கிடைக்கவேண்டும் என்ற காரணத்தாலேயே இந்த வழிபாட்டு முறைகளெல்லாம் ஆன்றோரால் ஏற்படுத்தப்பட்டன.

### அன்பு வழிபாடு

வயிற்றில் சுமந்து உன்னை இந்த உலகத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தவள் தாய். அதற்குக் காரணமாக இருந்தவர் தந்தை. வெறும் பார்வையுடன் இருக்கும் நமக்கு ஞானக்கண் தருபவர் குருநாதர். அந்தப் பார்வையின் மூலம் நாம் காணவேண்டியவர் தெய்வம். இந்த நால்வரையும் வழிபடவேண்டியது நமது கடமை அதை அன்பு வழிபாடாக செய்வது பெருமை.

–மாதா ஆனந்தமயீ–

# மதமாற்றம் ? —ஒரு நோக்கு



செ. சிறீக்கந்தராசா

மனித உரிமைகளை மதிக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்ற காலமிது. பேச்சுச் சுதந்திரம் கருத்துச் சுதந்திரம் என்ற அடிப்படை உரிமைகளை மதிக்க வேண்டும் என்பது நிலைபேறாகிவிட்ட உலகம் இது. இந்த இரண்டு சுதந்திரங்களையும் பல்லாண்டுகளாகவே போற்றிவந்த சமயம் இந்து சமயம். ஆகவே இந்து சமயத்தை (சைவசமயத்தை) உண்மையில் அனுஷ்டிக்கின்றவர்கள் மதமாற்றம் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளமாட்டார்கள். அலட்டிக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. ஆனாலும் இந்து மதத்தில் வாழ்ந்தவர்கள் வேறு மதத்துக்குப் போவதைக் கண்டால் சும்மா இருக்கவும் மாட்டார்கள். தன்னுடைய கட்சியைவிட்டு மாற்றான் கட்சியில் சேர்ந்தால் தன்னுடைய கட்சியில் இருக்கின்ற குறைபாடுகள் என்ன என்று கேட்டு, தன்னுடைய கட்சியில் இருக்கக்கூடிய குறைகளை நீக்க முயல்வான். அப்படித்தான் இந்து சமயம் பலகாலமாகச் செய்து வந்தது. அப்படியான ஒரு பரிசீலனையைச் செய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

### மதம் மாறுவது குற்றமா? மதம் மாற்றுவோர் குற்றவாளிகளா?

மனித உரிமைகள் பிரகடனத்தின்படி அவர்கள் குற்றவாளிகள் அல்ல. மனித உரிமைகள் பற்றிய சாசனம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தான் உருவாக்கப்பட்டது. அதுவும் ஐரோப்பியர்களால் உருவாக்கப்பட்ட சட்டம். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த திருவள்ளுவர் என்ற ஒரு பெரியார் வேறொரு சட்டத்தை எங்களுக்குத் தந்திருக்கின்றார். அவர் சொன்னார்–அப்பனே அவர் பிழை இவர் பிழை அவர் குற்றவாளி இவர் குற்றவாளி என்று சொல்லுவதற்கு முன்னர் நீ சுத்தவாளியா எனஉன்னையே கேட்டுப்பார் என்கிறார் வள்ளுவர். "தன்குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின் என் குற்றம் ஆகும் இறைக்கு "என்று கேட்கிறார் வள்ளுவர்.

அவன் சமயம் மாறிவிட்டான் இவன் சமயம் மாறிவிட்டான் என்று அங்கலாய்க்கிறாயே! குற்றஞ்சாட்டுகிறாயே! அவனோ அவளோ ஏன் மதம் மாறினார்கள் என்பதை எண்ணிப் பார்த்தாயா? உன்னுடைய மதத்திலே என்ன குறைகள் இருக்கின்றன என்பதை யோசித்துப் பார்த்தாயா? உன்னிலே குற்றம் இருக்கத்தக்கதாக உன் சமயத்திலே ஓட்டையும் உடையலும் இருக்கத்தக்கதாக மற்றவர்கள் குற்றவாளிகள் என்று கூறலாமா என்று கேட்டு அங்கலாய்க்கின்ற எங்களுக்கு வழிகாட்டுகின்றான் வள்ளுவன்.

"நோய்நாடி முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்று ஒரு குறள் உண்டு. அந்தக் குறளைத் துணையாக வைத்துக் கொண்டு மதமாற்றம் என்ற விடயத்தை அணுகுவது பயன்தரும். பிரச்சனை எது என்று பார். பிரச்சனைக்கு காரணம் என்ன என்று யோசி. இது தான் பிரச்சனை என்று துணிந்த பின்னர் அதை மாற்றுவதற்கு வழி என்ன என்று தேடிப்பார். அதன் பிறகு நிலைமைக்கு ஏற்றவாறு மருத்துவத்தை செய் என்கின்றான் பொய்யாமொழியான்.

மதமாற்றம் என்ற நோய் அகதித் தமிழனை வதையாக வதைத்துச் சிதைக்கின்றது..

மதமாற்றம் புதிய நோய் அல்ல பழைய நோய் தான் ஆனால் புதிய வடிவம் எடுத்திருக்கின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் மாதமாற்றம் இருந்தது. தேவார காலமென்ற நாயன்மார் காலத்திலும்

இருந்தது. முகலாயர் காலத்திலும் இருந்தது. போத்துக்கீயர் காலத்திலும் இருந்தது. ஆங்கிலேயர் காலத்திலும் இருந்தது. இன்றும் இருக்கின்றது.

நோய் என்ன என்று தெரிந்துகொண்டோம் இந்தப் பெரு நோய்க்கு முதலென்ன? இந்து மக்கள் ஏன் மதம் மாறினார்கள்? ஏன் மதம் மாறுகின்றார்கள்? ஏன் மதம் மாறிக்கொண்டேயிருக்கின்றார்கள் ?அதாவது இந்து சமயத்தில் இருந்த இருக்கின்ற குறை என்ன? அல்லது இந்து சமயப் பெரியவர்களில் இந்து சமய நிறுவனங்களில் காணப்படுகின்ற குறை என்ன? இதை நாங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**"எதிலார் குற்றம் போல் தம்குற்றம் காண்கிற்பின் தீதுண்டோ மன்னும் உயிர்க்கு "**

ஆகவே மதம் மாறுகின்றார்களே என்று அங்கலாய்த்து ஆர்ப்பாரிக்கின்ற எங்களிலே எங்களுடைய இந்து சமுதாயத்திலே இருக்கின்ற குறைகள் என்ன ? ஆயிரம் இருக்கின்றன. கேட்க ஒரு மாதிரியாகத்தான் இருக்கும் ஆனால் உண்மை!

உலகத்திலே உள்ள சமயங்களின் தளர்ச்சியை வளர்ச்சியை எடுத்துப் பார்த்தோமானால் இந்து சமயத்திலிருந்து தான் பலர் மதம் மாறுகின்றார்கள். மற்றச் சமயங்களிலிருந்து நம்முடைய இந்து மதத்திற்கு மாறிவந்தார்கள். மாற்றப்பட்டார்கள் என்று வரலாறில்லை. ஒரு சிலர் மாறியிருக்கலாம். ஒரு நிவேதிதாவையும் தந்திரதேவாவையும் இங்கே கணக்கில் எடுக்கக்கூடாது.

ஆங்கிலேயன் ஒருவன் சொன்னானாம் இப்படி

`'There Are Thousands Of Heles For A Hindu To Leave Hinduism But Not Even A Single Entrance To Attract One Towards Hinduism `'

இந்து ஒருவன் இந்து சமயத்தை விட்டு வெளியே போவதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கின்றன. ஆனால் வேற்றுமதக்காரனை நம்முடைய இந்து மதத்துக்குள்ளே ஈர்ப்பதற்கு ஒரு காரணம் கூட எம்மதத்தில் இல்லை என்றானாம் அந்த ஆங்கிலயன். மேற்படி வார்த்தைகளைச் சீரணிக்க முடியவில்லை நம்மால். ஆனால் அதிலே உண்மையிருக்கின்றது.

அப்படியானால் நம்முடைய சமயத்திலே உள்ள குறைகள் என்ன?

இந்து சமயத்தத்துவங்களும் கோட்பாடுகளும் கொள்கையளவிலேயே நிற்கின்றன. நடைமுறையில் இல்லை. அடிப்படை உரிமைகள் பற்றியும் மனிதாபிமான உரிமைகள் பற்றியும் இந்து சமயம் கூறுகின்றது என்பது உண்மைதான். உயில் எல்லாம் ஒன்று தான். சீவனும் சிவனும் ஒன்றுதான் என்று சொல்லுகின்றன. நம்முடைய தத்துவங்கள் அன்பு செய்யவே நாம் பிறந்தோம் என்கின்றார் திருமூலர் திருமந்திரத்தில். ஆனால் இவை நடைமுறையில் இல்லை. அன்றாட வாழ்வில் இல்லை சமுதாயநீதி!

இதனாலே தான் அன்றைக்குப் பவுத்த மதம் தோன்றிற்று. சமண மதமும் தோன்றிற்று. பாமரருக்கு ஒரு நீதி அல்லாதாருக்கு ஒரு நீதி என்று மனுநீதி சொன்னதாலே தான் பவுத்தமதமும் சமணமும் தோன்றின. பிராமணக் கொடுமையையும் சமுதாயக் கொடுமையையும் எதிர்த்து எழுந்த சமயங்கள் தான் பவுத்தமும் சமணமும்.

அன்றைக்கு இந்துக்கள் சமணராகவும் பவுத்தராகவும் மாறியது இந்து மதத்தின் குறையல்ல. இந்துத் தத்துவங்களின் பிழையுமல்ல. சமயப் பெரியார்களின் பிழை. சமயவாதிகளின் பிழை. இன்றைய வாழ்க்கையைப் பற்றி இகவாழ்வைப் பற்றி, இந்துசமயம் கருத்துச் செலுத்தவில்லை. அது பரலோகம் பற்றியும் பரமனடிபற்றியும் பேசியது. மோட்சம் பற்றிப் பேசிய, இன்றைய வாழ்வை, இன்றைய வாழ்வுச் சுமையைக் குறைக்கும் வழியைக் காட்ட இந்து சமயம் தவறியது. தவறுகின்றது.

**இந்து சமயம் இந்துகளுக்கு மோட்சத்தைக் கொடுத்ததோ இல்லையோ எனக்குத் தெரியாது ஆனால் அது இந்துக்களுக்கு நிம்மதியான அன்றாட வாழ்வைக் கொடுக்கவில்லை.** எனவே தான் பவுத்தமும் சமணமும் முளைத்துத் தழைத்தன. சாதிக்கொடுமை, பிராமணர் அதிகாரம், பாலியத் திருமணம், உடன்கட்டையேறல், கல்விமறுப்பு, நோய், வறுமை, சமூக ஏற்றத்தாழ்வு, என்ற பல நோய்களால் இந்துக்கள் வாடினார்கள். அவர்களின் சஞ்சலம்போக்க இந்துசமயம் கைகொடுக்கவில்லை. கோவிலும் கைகொடுக்கவில்லை. மடங்களும் கைகொடுக்கவில்லை. மடாதிபதிகளும் கைகொடுக்கவில்லை,

அவர்கள் எல்லோரும் தந்தகோபுரங்களில் இருந்தபடி தத்தம் வயிற்றை வளர்த்தார்களே ஒழிய ஈனர்களின் துயர்துடைக்க முன்வரவில்லை. அதற்கு மாறாக துன்பத்தில் துவள்வோனைப் பார்த்து " உது, உனது பழைய கர்மம், வினைப்பயன். வினைப்பயனை வெல்வதற்கு வேதம் முதலாய நூல்களிலும் மார்க்கம் சொல்லப்படவில்லை என்று பின்னரும் வறட்டுத் தத்துவம் பேசினார்கள். வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சினார்கள்.

நொந்துவெந்தவனுக்குக் கோயில்கள் சொன்னதென்ன? கஷ்டம் நீங்க வேண்டுமானால் பதினொரு வேள்வி செய் இருபத்தேழு அபிஷேகம் செய், 501 அர்ச்சனை செய் என்று மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் அறிவுக்குப் பொருத்தமில்லாத மார்க்கம் சொன்னார்கள் ஐயர்மாரும் ஆலய அதிகாரிகளும். பிரான்சு நாட்டை ஆண்ட மேரி அன்டோயினட் என்ற அரசியும் அப்படித் தான் சொன்னாளாம். அம்மா பசிக்குதே என்று அழுத பிரெஞ்சு நாட்டு பிரசைகளைப் பார்த்து அவள் சொன்னாளாம் " பாணில்லையா? பரவாயில்லை கேக்கைச் சாப்பிடுவது தானே?" என்றாளாம் அந்தப் புத்திசாலி. அப்படித் தான் இந்த மதப் புத்திசாலிகளும் சொன்னார்கள், சொல்லுகின்றார்கள், இதன் விளைவு தான் புத்தமும் சமணமும் இன்றைய கிறித்தவமும் . புத்தமோ சமணமோ இந்து சமயத்திலிருந்து பெரிதும் வேறுபட்ட சமயங்களல்ல. வேதத்தை வியாக்கியானம் செய்த முறையிலே தான் அவை பிணங்கிப் பிரிந்தன.

வாழ்க்கை வாழ்வதற்கே என்றன அவை. ஊனெடுத்த உயிர்க்கெல்லாம் அன்பு செய்க என்றன அவை. அன்பு செய்ய விரும்பினால் மடாதிபதிகளும் மக்களிடம் போக வேண்டும். மக்கள் சேவையே மகேசன் சேவை என்றன அவை. நோய் எங்கோ அங்கே நீ போய் ஆவன செய் என்றன அந்தச் சமயங்கள்.

முன்பில்லாத முறையில் தம்மை நாடி வந்த பவுத்தகுருமாரைக் கண்டதும் மக்கள் மகிழ்ந்தனர். சாதிக்கொடுமையும் நோய்த்துயரம் வறுமைப்பிணியும் கல்வியில்லாக் கொடுமையும் நீங்குவதற்கு வாய்ப்புத்தரும் சமயமே மெய்ச்சமயம் என்றெண்ணி இந்துக்கள் இலட்சக்கணக்கில் மதம் மாறினார்கள். கட்டின்றி தொடர்ந்தது மதமாற்றம். இந்துக்குருமார்கள் கோவிலுக்குள் நின்றபடி அரோகரா அம்பலவாணா என்று சொல்லி வாய்ப்பந்தலாம் ஆசீர்வாதத்தை வழங்கிக்கொண்டிருந்தார்கள். புத்தகுருமாரோ சேரிக்குள் வாழும் மக்களிடம் போய் அவர்கள் அருகேயிருந்து துயர் துடைத்தார்கள். இந்துமதம் நலிந்தது. பவுத்தமதம் பொலிந்தது. வலிந்தது. மறுக்கமுடியுமா? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த கதை இப்போது தொடங்கியிருக்கின்றது. அப்போது இந்தியாவில் நடந்த கதை இப்போது உலகெலாம் பரவி நடைபெறுகின்றது. ஆனால் இந்துமதம் இன்னும் தாங்கிக்கொண்டு தான் இருக்கின்றது. இலண்டன் கோயில்களைப் பார்த்தால் தெரிகின்றது.

இன்று இஸ்லாம் மதத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையில் 27 நாற்காலிகள் உள்ளன. உலகத்தின் மிகப்பழைய மதமான இந்துமதத்திற்கு ஒரேயொரு நாற்காலி மட்டும். யாருடைய குற்றம் ? சிந்தீப்பீர்களா? அழுக்கினை மூடிமறைப்பதால் பயனில்லை. இந்து சமயத்திற்கு ஒன்றும் நடக்கவில்லை நடந்துவிடாது என்று சொற்சிலம்பம் ஆடுவதில் பயனில்லை. பவுத்தம் இந்து சமயத்தை அழித்ததா? சமணம் இந்து மதத்தை அழித்ததா என்று வெறும் பேச்சுப் பேசலால் பயனில்லை. பௌத்தமும் சமணமும் சுழன்றடித்தபோது இந்துக்கள் விழித்தெழுந்தார்கள். குறைகளைக் களைந்தார்கள். இந்து மதம் பிழைத்தது. இது தான் உண்மை. அரகர சிவசிவ சிவாயநம நமசிவாய என்று தந்தகோபுரத் தத்துவம் பேசியிருந்தால் இந்து மதம் அழிந்திருக்கும்.

மதமாற்றம் என்பது ஒரு வயிற்றுப்பிரச்சனை, பொருளாதாரப்பிரச்சனை, சமுதாயப்பிரச்சனை, என்பதை நாம் உணரவேண்டும். அது தத்துவப்பிரச்சனை அல்ல. தருமப்பிரச்சனை அல்ல, வறுமையும் வாய்ப்பின்மையும் சமூக ஏற்றத்தாழ்வு இருக்கும் வரைக்கும் மத மாற்றமும் இருக்கும். மதச்சார்பு அற்ற நாடு என்று இந்தியா பேசுவதில் அர்த்தமில்லை. ஏலவே இந்தியா பாதிநாட்டை இஸ்லாத்திற்குப் பறிகொடுத்துவிட்டது. இருக்கின்ற இந்தியாவும் சில நூற்றாண்டுகளில் முஸ்லீம் நாடாக மாறிவிடும், மடாதிபதிகளின் மனப்போக்கில் மாற்றம் ஏற்படாவிட்டால்.

மதம் மாறுவதில் தற்காலிக இன்பம் காணும் எமது சகோதரர்கள் கவனிக்க வேண்டிய ஒன்று உண்டு. கிறித்தவ சமயத்தில் காணப்படும் தத்துவங்களை மெச்சியோ நச்சியோ அவர்கள் மதம் மாறவில்லை. சேர்ச்சிற்குப் போய்விட்ட அவர்கள் கூட

பிள்ளையாரையும் முருகனையும் தான் தொழுகின்றார்கள். ஏன் அவர்கள் மதம் மாறுகின்றார்கள் என்பது எமக்குப் புரிகின்றது இருந்தும் அவர்களுக்கு ஒன்று சொல்ல வேண்டும். அதுவும் விவிலியத்தில் தான் இருக்கின்றது.

'Man Does Not Live By Bread Alone'

சோறும் பாணும் மூன்று நேர உணவும் மட்டுமல்ல வாழ்க்கை. அதற்கு மேலும் எவ்வளவோ இருக்கின்றது. உண்பதற்காக எவரும் வாழ்வதில்லை. வாழ்வதற்காகவே உண்ணுகின்றார்கள்.

மதம் மாறிய அன்பர்களே கேளுங்கள். நீங்கள் மதம் மாறியதால் இந்து சமயத்திற்கல்ல இழப்பு. உங்களுக்குத் தான் இழப்பு. இந்து சமயம் சகிப்பிற்குப் பெயர்போனது. அது உங்களை ஒதுக்காது. மன்னித்துவிடும். இந்து சமயம் புத்தனைச் சகித்தது தீர்த்தங்கரைச் சகித்தது, சர்வாகரைச் சகித்தது , மாணிக்கவாசகரையும் சகித்தது, நாவுக்கரசரையும் சகித்தது, ஈ.வே.ராவையும் பொறுத்தது. தி.மு.க வையும் சகித்துக்கொண்டிருக்கின்றது. இனிமேலும் சகிக்கும். வள்ளுவன் சொன்னான்,


ஏற்றற்குரியவர் கயவர் ஒன்று உற்றக்கால்
தம்மை விற்றற் குரியவர். என்று .

உங்களை விற்றுவிடாதீர்கள். வறுமை போம் வறுமையில்பட்ட வடு போகாது .

### திருக்கல்யாண வரலாறு

ஒரு சமயம் ஸ்ரீ அகஸ்திய முனிவர் இத்தலத்தில் காசிபர், உமாதேவி மற்றுமுள்ள முனிவர்களுடன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து கொண்டிருக்கையில் சிவபெருமான் அவர்கள் முன் தோன்றி அவர்கள் தவத்தை மெச்சி " வேண்டும் வரங்களை கேட்பீர்களாக" என திருவாய் மலர்ந்தருள, முனிவர்கள் இறைவனிடம் தத்தமக்குரிய வரங்களை வேண்டிப் பெற்றனர். ஆனால் அகஸ்தியர் " பிரபோ! முன்பு பர்வதராஜனுடைய புத்திரியாக அவதரித்த உமாதேவியாரை திருமணம் செய்து விநாயகர், முருகன் போன்ற தெய்வங்களைப் பெற்று தேவர்களுடைய குறையைப் போக்கினீர்கள். அவ்வாறு தங்கள் கட்டளைக்கிணங்க தங்களைப்பிரிந்து தவம் புரியும் உமாதேவியாகிய மூகாம்பிகையை திருமணம் செய்து காட்சியளிக்க வேண்டுகிறோம். " இதற்கிணங்க சிவன் வைகாசிமாதம் உத்தர நட்சத்திரத்தில் அம்பிகையைத் திருமணம் செய்து அகஸ்தியருக்கும் ஏனைய முனிவர்களுக்கும் காட்சி கொடுத்தார். இன்றும் திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீன கர்த்தரின் முன்னிலையில் இத் திருமணத் திருவிழா சிறப்புற நடைபெற்றது.


## சிதம்பர ஆலய சிற்ப வடிவங்கள்



சந்திரசேகரர்

நன்றி : கோபுர தரிசனம்

# அணங்கினர் அவை



**அணங்கினர் அவையை இறையருள் பெற்ற மகளிரும், இறையடியார்களின் அருட்கனிவில் திளைத்தும் நம்மவர்களால் அறியப்படாத மாதரும் பொலிவிப்பர். அவற்றுடன் பெண்கள் விரும்பும் கலைகளும் அதில் சிறந்து விளங்கிய பெண்டிரும் பாடல்களும் சிறுகுறிப்புகளும் பரிமளிக்கும்.**

**–சாலினி–**

பொங்குருச் செல்வங் கல்வி பொருவிலா வாய்மை, தூய்மை
இங்கெமக்கருள வல்ல இணையிலா எம்பிராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை அடிக்கமலங்கள் போற்றி
–திருவிளையாடற் புராணம்–

# மனைவியெனும் அருளமுதம்

பாரதிதாசன் தென்திசையைப் பார்த்து தன் சிந்தையெல்லாம் தோள்கள் எல்லாம் பூரித்தகாலம். அது இலங்கையின் பொற்காலம். அப்பொழுது இலங்கையின் வடமேற்குப்பகுதியை மயன் ஆண்டுவந்தான். அவனின் மகள் வண்டார் குழலி (மண்டோதரி) அவள் குழந்தைப்பருவம் முதல் ஈசன் மேல் தெய்வீகக் காதல் கொள்கின்றாள்.

ஈசனும் "நீ அழைத்தால் நான் வருவேன்" என்று சத்தியம் செய்து கொடுக்கின்றான்.

உத்தரகோச மங்கை என்னும் இடத்தில் இது நடக்கின்றது. (உத்தரம்–வாக்கு, கோசம்–சத்தியம் அதாவது மங்கைக்கு சத்தியவாக்கு கொடுத்த இடம்) அவளும் தான் விரும்பிய பொழுதெல்லாம் ஈசனை அழைத்து அவனுடன் ஆடிப்பாடி மகிழ்கின்றாள்.

நாவுக்கரசர் ஒரு தேவாரத்தில் "இறைவன் மங்கையான பார்வதி காண மணமாலையைக் கொடுக்க மாட்டார். கங்கை காண தலையில் சூடியிருக்கும் தலைக் கண்ணியை (மாலை) கொடுக்கமாட்டார். இந்த இரு நங்கையர்கட்கும் இடையே மயனின் மகளுக்கு எங்கு வாங்கி இதழி (மாலை)யைக் கொடுத்திருப்பார் என அங்கலாய்க்கின்றார். திரிகூடராசப்பகவிராயர் தென் இலங்கையில் வாழ்ந்த ஒப்பற்ற கன்னிகையான மண்டோதரியாள் இறைவனின் அழகிய திருவடியைச் சேர்ந்து அணைவதற்கு என்ன தவம் செய்தாளோ என வியக்கின்றார்.

இவ்வாறு தெய்வீகக் காதலில் களித்து இருக்கின்றாள் இளவரசியான வண்டார்குழலி. அவளுக்குத் திருமணம் நடக்கின்றது. இறைவனையே இசையால் இசைவித்த இராவணனுக்கும் அவளுக்கும் திருமணம். அவள்

"எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க"

என்னும் மணிவாசக சுவாமிகளின் வாக்குக்கு இலக்கணமாகத் திகழ்கின்றாள். ஆனால் ஊர் தூற்றுகின்றது. அவள் ஈசனுடன் ஆடிப்பாடி மகிழ்ந்ததெல்லாம் அவளுடைய தோழியருக்குத் தெரியாமலா இருக்கும். ஊரார் பழிக்குக் குறைவில்லை. பத்துத் திசையும் தன் புகழ்மணக்க வாழ்ந்த இராவணனின் பத்தினிக்கு உலகம் களங்கம் கற்பிக்கின்றது. அவனோ அது பற்றிக் கேட்டானில்லை. அவனே ஈசாம்சம் தானே.

*''ஒருவனே இராவணாதி பாகவம் உற்றாற்போல தருவன் இவ்வுருவமெல்லாம்........''*

(பாகவம் – உருவம், தோற்றம்) ஈசன் எனும் ஒருவனே இராவணனாக உருவெடுத்தான் என அருணந்திதேவர் கூறுகின்றார்.

தன் கணவனின் ஏறுபோன்ற பீடுநடைக்குத் தன்னால் களங்கம் வரக்கூடாது என நினைக்கின்றாள் வண்டார்குழலி. புகழ்புரிந்த இல்லாளாக தன் களங்கம் துடைத்து கணவன் புகழ்காக்க ஈசனை நோக்கி பக்தி வேள்வி நடத்துகின்றாள்.


தான் ஈசன்மேல் கொண்ட காதல் ஆத்மீகமானது என நிரூபிக்க ஈசனைத் தன் குழந்தையாக வர வேண்டுகின்றாள். அவள் காதலன் அவளுக்கே குழந்தையாகப் பிறக்கமுடியுமா? ஈசனோ அழகிய குழந்தையாக அவள் முன் அவதரிக்கின்றான். தாயான தயாநிதிக்கே தாயாகி குழந்தையை வாரி அணைத்தெடுத்து உச்சிமோந்து கணவனான இராவணன் கையில் கொடுக்கின்றாள்.

அவனும் எவ்வுருவும் தன்னுருவான ஈசனை குழந்தையாகக் கொஞ்சி மகிழ்கின்றாள். சிவநேயச் செல்வனான இராவணன் மனைவியெனும் அருளமுதத்தினை மாந்தி ஈசனையே குழந்தையாகப்பெறும் பேறு பெற்றான். (உத்தர கோசமங்கை புராணம்) இராவணன் ஓதிய மந்திரங்கள் எண்ணற்றவை. அவற்றுள் ஒன்று அவன் மனைவியின் நாமம்

*ஓங்கு புகழ் இராவணனார்*
*ஓதியதோர் மந்திரமாய்*
*மாங்குடனே மயனவனும்*
*பெற்றெடுத்த பொற்றொடியாள்*
*வாங்குசிலை இராமனுமே*
*வாழ்த்தி வணங்கிடவே*
*தேங்குமலி தென்னிலங்கை*
*தெருவினிலே நடந்தனளே.*

# ஆடல் ஆடலோ

மனிதன் தோன்றிய போதே ஆடற் கலையும் தோன்றி அவன் தன்



எண்ணங்களை பரிமாறமுயன்ற பொழுது செய்கைகள் மூலம் அவற்றை மற்றவர்கட்கு உணர்த்தினான். அந்தச் செய்கைகளே ஆடலாகப் பரிணமித்தது. எனவே பேச்சு, தோன்ற முன்பே ஆடல் தோன்றிற்று எனில் அது மிகையாகாது மனித எண்ணங்கள் வாயால் பாடப்படுவது போல அங்கங்களால் அபிநயித்துக் காட்டப்பட்டது. இதனால் திருக்கோயில்களில் பாடலும் ஆடலும் இரு கண்களாகத் தமிழர்களால் போற்றப்பட்டு வந்திருக்கின்றது. பல கோயிற் கல்வெட்டுக்கள் ஆடல்மகளிரின். ஆடற்சிறப்பையும் அபிநயச் சிறப்பையும் கூறுவதோடு தலைக்கோல் பெற்ற ஆடல்மகள் பல ஆடற்பெண்களுக்கு தலைவியாக இருந்து ஆடல் நிகழ்ச்சிகளை நடத்தியதையும் கூறுகின்றன.

பெருங்கதையில் வரும்.

*"யாழ் முதலாக அறுபத்தொரு*
*நான்கு ஏரின*
*மகளிர்க்கு இயற்கை*
*என்று எண்ணி கலையுற*
*வகுத்த....*

இப் பாடலால் யாழ் முதலாக 64 கலைகள் ஆடல்மகளிருக்கு தெரிந்திருக்க வேண்டும் என்பது தெரியவருகின்றது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் (கி.பி.30) தஞ்சை மயிலாடு துறைக்கு அருகேயுள்ள கழாத்து றையில் ஆடிப்பெருக்கு விழா நடைபெற்றது. (இன்னும் ஐப்பசி மாதத்தில் முழுக்கு விழா கொண்டாடப்படுகின்றது. அங்கே புனல் விளையாட்டு (நீச்சல் போன்ற) இடம்பெற்றது. அவ்விழாவை கரிகாற் சோழன் தொடங்கி வைத்தான். அவன் மகள் ஆதிமந்தியும் அவள் கணவனான ஆட்டன் அத்தியும் வந்திருந்தனர். அத்தி எல்லாக் கலைகளிலும் வல்லவன். பெரும் வீரனான அவன் அன்று நடைபெற்ற நீர் விளையாட்டில் பங்கு கொண்டு பல சாகஸங்களைச் செய்து காண்போரை மகிழ்வித்துக்கொண்டிருந்தான். திடீரென காவிரியில் எழுந்த நீர்ப்பெருக்கு அவனை இழுத்துச் சென்றது. ஆதிமந்தி காவிரிக் கரையோரம் கதறி ஓடுகின்றாள்.

*''.......யாண்டும் காணேன்*
*மாண்தக் கோனை*
*யானுமோர் ஆடுகளமகளே*
*என்கைக்*
*கோடீரிலங்குவளை ஞெகிழ்த்த*
*பீடு கெழுகுரிசிலுமோர் ஆடுகள*
*மகனே''*

என்ற அவள் கதறலை அவள் வாயாலே குறுந்தொகையின் 312ஆம் செய்யுளில் கேட்கின்றோம்.

தன்னை ஓர் ஆடல்மகளாகச் சொல்லும் அவள் சங்கப்புலவோர் வரிசையில் இடம்பெறக்கூடிய அளவுக்கு பாடல் எழுதக்கூடிய ஆற்றல் இருந்திருக்கின்றது. தமிழ் இலக்கண இலக்கியமரபு தெரிந்திருக்கின்றது. ஆடல்மகனான ஆட்டன் அத்தியும் கலை வல்லவனாக இருந்திருக்கின்றான். காவிரியால் இழுத்துச் செல்லப்படும் கணவனைத் தேடியோடி கதறியழும் போதும் சோழப் பேரரசனின் மகளாக இருந்தும் தன்னை ஆடுகள மகள் என்றும் கணவனை ஆடுகளா மகன் என்றும் குறிப்பிடுவது அவளுக்கு ஆடற்கலை மேல் இருந்த ஈடுபாட்டையும் அன்றைய சமுதாய அமைப்பு ஆடற்கலைக்கு அளித்த மதிப்பையும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

பண்டைய சரித்திர வரலாற்றில் ஓர் உன்னத நிலையில் வைத்துப் போற்றப்படும் கரிகாற்பெருவளத்த மகள் ஓர் ஆடற்கலைஞனை காதல் மணம் செய்யவும் அதனை பெருமையாகச் சொல்லவும் ஈராயிர ஆண்டுகளுக்கு முன் தமிழர் கலாச்சாரம் இடம் அளிக்கின்றது. அகநானூற்றில் பரணர் பல பாடல்களிலும் வெள்ளி வீதியார் ஒரு பாடலிலும் ஆதிமந்தியைப் புகழ்ந்து பாடியுள்ளார். ஆற்றலும் அறிவும் உள்ளவர்களாக அந்தச் சமூகத்தில் பெண்கள் இருந்திருக்கின்றார்கள். இதற்கு இவள் ஓர் எடுத்துக்காட்டு எக்கலையிலும் வல்லவர்களே ஆடற்கலையிலும் சிறந்து விளங்கியதால் ஆடற்கலையை நம்முன்னோர்கள் போற்றினர். ஆடற்கலையின் பெருமையை உணர்ந்த தமிழ்ச் சான்றோர் அதனை இறையுடன் இணைத்தனர். அருணகிரிநாதரின் வேண்டுகோளுக்கு இணங்க முருகன்

*''அதலசேடநாராட அகில*
*மேருமீதாட*
*அபினகாளி தானாட அவளோ*
*டும் அன்று*
*அதிர வீசிவாதாடும் விடையிலே*
*றுவாராட*
*அருகு பூதவேதாளமவையாட*
*மதுரவாணி தானாட மலரில்*
*வேதநாராட*
*மருவுவானுலோராட மதியாட*
*வனசமாமியார் ஆடநெடிய*
*மாமனாராட*
*மயிலும் ஆடி வர''*


நாமும் ஆடலோ ஆடல் என்றாடுவோம்

**சாலினி**

## இறைவன் வருவான் இன்னருள் தருவான்

ஒருமுறை ஆசாரிய வினோபா வே சிறு பிள்ளையாக இருந்த போது அவர்கள் வீட்டுக்குப் பிச்சைக் காரன் ஒருவன் பிச்சை கேட்டுவந்தான். அவன் நன்றாக ஆரோக்கியமாக இருப்பதைக்கண்ட சிறுவன் வினோபா" நீதான் நன்றாக இருக்கிறாயே! உழைத்துச் சாப்பிடுவதை விட்டுவிட்டு ஏன பிச்சை எடுக்கிறாய்? பிச்சை கேட்கும் தகுதி உனக்கு இல்லையே" என்றார்.இதைக் கேட்டபடி உள்ளே இருந்து வந்த வினோபாவின் தாயார் மகனே ஏன் அவனை விரட்டுகிறாய். இவன் ஆண்டவனாகவும் இருக்க லாமே! மேலும் அவனுக்குப் பிச்சை எடுப்பதற்குத் தகுதி இருக்கிறதா இல்லையா என்று சொல்ல நமக்கு என்ன தகுதி இருக்கிறது. இறைவன் எப்படி வேண்டுமானாலும் வருவான். எனவே எல்லோரையும் உபசரிக்கக் கற்றுக்கொள்." என்றார். அதைப்போல் இறைவன் எப்படியும் வருவான். அவன் இன்னருள் எப்படியும் கிடைக்கும்.

# கோவிலும் மக்களும்



-ராஜா-

எதிர்காலத்தில் இந்து சமய மக்கள் சமயத் தத்துவங்களை பேணி அதன்படி செயற்பட ஆவன செய்யவேண்டும். அத்துடன் சில சீர்திருத்தங்களுடன் செயற்பட்டால் இனிவரும் காலங்களில் நம் இளம் சமுதாயம் ஒரு நல்ல நிலைக்கு போக வாய்ப்பு ஏற்படும்.

எனவே இனிவரும் காலத்தில் ஓர் சமய சமூக அமைப்பின் கீழ் செயற்படுவது முக்கியமாகும். முதலில் நாம் அடித்தளத்தில் இருந்து படிப்படியாக ஆரம்பிக்க வேண்டும். அதைக் கோவிலில் இருந்து தான் ஆரம்பிக்க வேண்டும். அப்படிச் செய்யும் போது இந்து சமயமும் மக்களும் ஒரு நல்வழியில் வாழ வழிபிறக்கும். உதாரணமாக ஓர் சமய சமூக அமைப்பு என்று கூறும்போது அதன் தலைமையின் கீழ் கோயில்கள் அறநெறிப் பாடசாலைகள் புத்தகசாலைகள் குழந்தைப்பூங்காக்கள் பூந்தோட்டங்கள் மண்டபங்கள் என்பன இயங்க வேண்டும். அத்துடன் மாதமொரு முறை இலவச மருந்துவசதிகள் கண், இரத்தம் மற்றும் தானங்களும் ஏழைமக்களுக்கு உதவிகளும் அங்கவீனர்களுக்கும் வயோதிபர்களுக்கும் இல்லங்களும் தொழிற்பயிற்சி நிலையங்களும் மற்றும் சமய சொற்பொழிவுகள் கவியரங்குகள் பட்டிமன்றங்கள் தேவார திருவாசகங்கள் கற்றுத்தரவும் தகுதியானவர்களை நியமித்து அமைப்பின் கீழ் செய்து தரவேண்டும். இவை யாவும் கோயில் சம்பந்தப்பட்டவையாக இருக்க வேண்டும். இனிவரும் காலங்களில் நாம் கோயில்கள் அமைக்கும் போது ஊருக்கும் மக்கள் தொகைக்கும் ஏற்ப அமைக்கவேண்டும். அதில் சாதி ஏழை பணக்காரன் பேதமின்றி அந்த ஊர் மக்கள் ஒரு நாளைக்கு ஓர் குடும்பம் என்ற வீதம் கோயில் பூசையில் கலந்து கொள்ளவேண்டும். அவரவர் தகுதிக்குத் தகுந்த விதத்தில் பூசைக்குச் செலவுகளையும் அமைத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக சிறு தொகையில் பூசையில் முடிக்கலாம். ஆனால் சமய நிகழ்ச்சிகள் ஏதாவது ஒன்று மக்களுக்கு உபயோகமாக இருக்க வேண்டும். இதில் நிர்வாகம் ஒத்துழைப்பு கொடுக்கலாம். ஆனால் உபத்திரவம் கொடுக்கக்கூடாது. அவ்வாறு செய்யும்போது வீண்பிரச்சினைகள் வருவதால் தொடர்ந்து அவர்கள் தங்கள் விருப்பப்படி

செய்யமுடியாமல் இடையில் நிறுத்தவேண்டிய சூழ்நிலை உருவாகின்றது. எனவே எதிர்காலத்தில் கோயில் அமைக்கும் போது ஊரில் உள்ள மக்கள் தினமும் ஒருவர் என்று பூஜைப்பொறுப்பு எடுப்பதால் அவர்கள் தங்கள் தங்கள் தகுதிகளுக்கு ஏற்றவாறு கிரிகைகள் நிகழ்ச்சிகள் செய்வார்கள். ஒருவர் மற்றவரைப் பார்த்து நாளுக்கு நாள் விசேடமாக பூசைகளைச் செய்து வருவார்கள்.

இதனால் தனக்காக ஒதுக்கப்பட்ட நாளில் தனது உற்றார் உறவினர் நண்பர்களுக்கு அழைப்பு விடுத்து தாங்கள் செய்யும் கோயில் பூசையில் கலந்துகொள்ளச் செய்வதால் வருடம் ஓர் முறை திருவிழா என்றிருந்த கோயில் தினம் தினம் திருவிழாவாக காட்சிதரும். அத்தோடு மக்கள் மத்தியில் பஜனைகளும் துதிப்பாடல்களும் தினமும் பாடுவதால் ஆன்மீக சிந்தனை வர வாய்ப்பு இருக்கின்றது. அத்துடன் நமக்கும் சமயக் கடமைகள் உண்டு என்று உணர வாய்ப்பு உண்டாகின்றது.

இதில் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது யாதெனில் தினம் ஒருவர் பூஜை நிகழ்ச்சிகளை பொறுப்பு எடுத்துச் செய்யும்போது மக்கள் மனதில் சமயச் சொற்பொழிவுகளும் பட்டி மன்றங்களும் வழக்காடு மன்றங்களும் கவியரங்குகள் மற்றும் தேவார திருவாசகங்கள் அனைத்தும் காலத்திற்கு ஏற்ப அமையவேண்டும். இப்படிச் செய்யும்போது நாளுக்கு நாள் எங்கும் மக்கள் மத்தியில் சமயப்பேச்சுக்களும் இன்று என்ன நிகழ்ச்சி நாளை என்ன நிகழ்ச்சி என்று கேட்கும் ஆர்வமும் ஏற்படும். ஒருவர் ஓர் நிகழ்ச்சியைத் தவறவிட்டாலும் அடுத்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வாய்ப்பு இருக்கின்றது.

சமய சமூக அமைப்பு என்று கூறும்போது ஓர் தாபகரீதியாக செயற்பட வேண்டும். ஓர் தலைமையகமும் அதன் கீழ் அனைத்தும் அமைய வேண்டும். நிர்வாகிகளுக்கு சரியான ஆலோசனைகள் பயிற்சிகள் கொடுக்கவேண்டும். நிர்வாகமே செயற்திட்டங்களை வகுத்துக் கொடுக்க வேண்டும். இவை அமையும் போது இதுவே ஓர் பெரிய அமைப்பாக செயற்பட வாய்ப்பு இருக்கின்றது.

எனவே ஊருக்கு ஊர் கோயில் மக்கள் தொகைக்கு ஏற்ப பெரிய சிறிய கோயில்கள் அமைப்பதோடு அந்த ஊர்மக்கள் தினம் ஒரு நபர் மூலம் கலந்து கொள்ளவும் இருந்து சமயம் மேலும் மேலும் ஆன்மீக வாழ்க்கை வாழ வழிவகுக்கும். இதைவிட்டு கோயில் நிர்வாகம் ஓர் தனிநபர் அல்லது கூட்டு வியாபாரம் போலவும் அதில் வரும் வருமானத்தை பங்கு போடவும் வட்டிக்கு விடவும் வருடம் ஓர் திருவிழா செய்து முழுப்பணத்தை வீண்செலவுகள் செய்தும் அதனால் வீண்வழக்குகள் வம்புகள் என்று காலத்தையும் நேரத்தையும் வீண் செய்து மக்கள் மத்தியில் கோயில் என்றால் தனக்கு வேண்டியவர்களின் கூட்டமைப்பு என்ற வெறுப்பு ஏற்படவும் காரணமாகின்றது. இதனால் மக்கள் கோயிலை விட்டு வெகுதூரம் செல்லக்கூடிய துர்ப்பாக்கிய சூழ்நிலை உருவாகிறது.

எனவே இனி வரும் காலங்களில் கோயில் மக்களுக்காக என்பதை உணர்ந்து சில மாற்றங்களை பரீட்சார்த்தமாக செய்து பார்ப்போமானால் ஆத்மீகத்தில் ஆர்வம் கொண்ட மக்களுக்கு எதிர்காலத்தில் நல்ல பல மாற்றங்கள் நிகழ வாய்ப்பு உள்ளது.


HAIR DRESSING
&
MAKEUP
for Weddings & other occasions
சிகையலங்காரமும் ஒப்பனையும்


திருமண வைபவங்களுக்கும்
இதர வைபவங்களுக்கும்
உங்களை அலங்கரிக்க
நாடவேண்டிய இடம்

MRS SHAYANTHI SRIRATHAN

97 Springfield Drive
Barkingside
Ilford
IG2 6QT
TEL : 0181 252 2920

# முருகன் அன்பனுக்கு அன்பன்

**திருமதி நா. பாலசிங்கம்**



ஒரு நடுத்தரக் குடும்பம் இறைபக்தி மிக்கவர்கள் இருவரும் அரச ஊழியர்கள். கணவன் தலைநகரிலும் மனைவி தனது கிராமத்திலும் கடமை புரிந்தனர். இல்லற வாழ்வின் இனிய கனியாக ஓராண்டில் ஒரு அழகிய பெண் மகவைப் பெற்றனர்.

குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. பருத்த சிவந்த அழகிய மேனி கருவண்டுக்கண்கள் எல்லா அம்சங்களும் நன்கு அமைந்த நல்லதோர் பிள்ளைச் செல்வம். பிள்ளைக்கு ஓராண்டு முடிந்தது. இரண்டு ஆண்டுகள் பூர்த்தி ஆகியும் பிள்ளை தவழவோ நடக்கவோ மாட்டாமல் ஒற்றைக்காலை உதைத்து உதைத்து அங்கு மிங்கும் தனக்குத் தேவையான இடங்களெல்லாம் அசைந்து திரிவாள். இதனால் தாயுள்ளம் பெரும்வேதனையுற்றது.

பிள்ளைக்குத் தவழப் பழக்க தவழும் பொம்மை, நடக்கப் பழக்க நடக்கும் பொம்மை என தந்தை விளையாட்டுப் பொருட்கள் பல வாங்கியனுப்பினார். பிள்ளை அவற்றை விளையாடியது. ஆனால் பிள்ளையின் அசைவுகளில் எதுவித மாற்றமும் ஏற்டவில்லை.

காலையும் மாலையும் கடவுளை வணங்கும் தாய் கதிர்காமக் கந்தா என் பிள்ளை நடந்ததும் உன் சந்நிதிக்கு வந்து உன்னை வழிபடுவோம் என மனதில் வேண்டிக் கொண்டாள்.

கதிர்காமக் கந்தன் காதில் தாயின் அன்பு வேண்டுகோள் நன்கு கேட்டுவிட்டது. சில நாட்களின் பின் கதிர்காம உற்சவம் ஆரம்பமானது. தலைநகரில் கடமையாற்றும்

கணவன் தந்தி மூலம் மனைவியையும் மகனையும் தனது சிற்றன்னை ஒருவரோடு கதிர்காமம் செல்வதற்கு வரும்படி அழைப்பு விடுத்தார். தந்தியைப் பார்த்த மனைவிக்கு சற்றுத் தடுமாற்றம். நேர்த்தி வைத் துள்ளேனே பிள்ளை நடந்தபின் போவதென்று தானே நேர்த்தி. எதற்கும் கணவன் அழைப்பை மீறமுடியாது. எல்லாம் அவன் செயல் தான் என்று புறப்பட்டுச் சென்றனர்.

தலைநகர் அடைந்ததும் மனைவி தனது நேர்த்தி பற்றிக் கணவனுக்கும் மாமியார்க்கும் கூறினாள். நால்வரும் கதிர்காமம் சென்றனர். அந்த நாட்களில் கதிர்காமத்தில் பல தனியார் மடங்கள் உண்டு. அங்கே அறைகள் எடுத்து தங்கும் வசதிகள் இருந்தன. அப்படி ஒரு மடத்தில் அவர்களும் தங்கினர்.
கதிர்காம யாத்திரிகருக்கு அங்குள்ள தலங்களைச் தரிசிப்பதற்கு சில ஒழுங்கு முறைகள் உண்டு. அதன் பிரகாரம் அவர்கள் செல்லக்கதிர்காமம் போக வேண்டிய சமயம் வந்தது.

அதிகாலை சூரிய உதயத்துக்குச் சிறிது முன்னர் புறப்பட்டால் உச்சி வெயிலுக்கு முன் செல்லக்கதிர்காமம் போகும் காட்டுப்பாதையைக் கடந்து கோயிலுக்குப் போய் விடலாம் என்பதால் செல்லக்கதிர்காமம் செல்பவர்கள் அப்படிச் செய்வர். அதன் படி இந்தக் குடும்பத்தவர் மூவரும் மட்டும் சென்றனர். கதிர்காமக் கோயிலில் இருந்து சூரன்கோட்டை என்று சொல்லப்பட்ட இடத்தை தாண்டி (இப்போது அது புத்தவிகாரை) நீண்ட தூரம் காட்டுப்பாறை வழியே நடந்து செல்ல வேண்டும். அந்தக் காலத்தில் போக்குவரத்து வசதிகள் இல்லை. அந்தக் காட்டுப் பாறையில் கிட்டத்தட்ட முக்கால் பங்கு பாதை நடந்திருப்பார்கள். தந்தையின் கையில் இருந்த பிள்ளை தான் நடக்கப்போகிறேன் நடக்கப்போகின்றேன் என்று அடம்பிடித்தது. அழுதது. இறங்கிய பிள்ளையை தாய் ஒரு கையிலும் தந்தை ஒருகையிலுமாக பிடிக்க பிள்ளை காட்டுப்பாதையில் நடக்கத் தொடங்கினாள். அதன் பின் ஓடி ஓடி நடந்தாள். அவர்கள் செல்லக்கதிர்காமம் சென்று அங்கு பாயும் பாவம் தீர்க்கும் மாணிக்ககங்கையில் புனித நீராடி மாணிக்கப்பிள் ளையாரையும் கதிர்காமக் கந்தனையும் மனதார வாழ்த்தி வணங்கி மட்டில்லா மகிழ்ச்சியுடன் இறைவன் திருவருளைப் பெற்ற பேரானந்தத்துடன் மடத்திற்கு வந்தனர். மடத்துக்கு ஓடோடிச் சென்ற பேரக்குழந்தையைக் கண்ட பேத்தியார் தூக்கிய ணைத்து முத்தமிட்டு அங்குள்ளோர் அனைவருக்கும் நேர்த்தி பற்றிய கதையைக் கூறிவியந்தார்.

இறைவன் அன்பனுக்கு அன்பன். கதிரமலையானைத் தரிசிக்க மாணிக்க கங்கையில் நீராடி ஈர உடையுடன் யாத்திரை புறப்பட்டு நால்வரும் (சிற்றன்னையுடன்) மலையேறிச் சென்றனர். கதிரம லையானைத் தரிசித்து திரும்பும்போது இடைவழியில் இன்னோர் மலை- வள்ளிமலை இருப்பதாக யாத்திரிகர் சிலர் சென்றனர். இவர்களும் அங்கு சென்றனர். அது புதிய காட்டுப்பாதை செப்பனிடப்படாத பாதை. கல்லும் முள்ளும் மேடும் பள்ளமும் நிறைந்த பாதை. இரண்டடி தூரம் சென்று ஒரு மரத்தைப் பிடிக்காவிட்டால் பத்தடி கீழே சறுக்கி வரக்கூடிய வழி. தந்தை பிள்ளையைத் தூக்கிக் கொண்டு செல்ல அவரின் பின்னே மனைவியும் சிற்றன்னையும் சென்றனர். ஒருபடியாக வள்ளிமலையை அடைந்தனர். அங்கு ஒரு சாமியார் பூசை செய்து பிரசாதம் வழங்கினார். வழிபாடு முடித்துத் திரும்பும் போது ஏற்படும் கஷ்டம் பற்றி அவர்கள் சிந்தித்துக் கொண்டு இருந்தனர். வள்ளிமலைக்கு ஒரு வாலிபன் வந்தான். அவனுக்கு இருபது வயது மதிக்கலாம். நன்றாகத் தாம்பூலம் தரிக்கும் பழக்கமுடையவன் என்பதை அவனது உதடுகளும் பற்களும் பறைசாற்றின. குடும்பத்தவர் யோசனையை அவர்கள் முகக்குறியால் அறிந்த இளைஞன் இறைவன் எல்லாம் அறிபவன் நீங்கள் போகும் போது நானும் வருகிறேன் என்றான். குடும்பத்தாருடன் இளைஞனும் சேர்ந்து நடந்தான். சிறிது தூரம் சென்றதும் பெண்கள் இருவரும் கஸ்டப்படுவதைக் கண்ட வாலிபன் ஐயா நீங்கள் அவர்களோடு வாருங்கள் நான் பிள்ளையைக் கொண்டு வருகிறேன் என்று பிள்ளையை வேண்டிக்கொண்டு வேகமாக நடந்தான். வாலிபன் பிள்ளையுடன் வேகமாக ஓடி ஓடி நடப்பதைப் பார்த்த தாயார் பிள்ளையை நகைகளுக்காக அவன் கொண்டு போகின்றான் என்று பயந்து கணவனை வேகமாகப் போய் பிள்ளையை வேண்டும்படி கூறினாள். கணவனும் ஓடியோடி

தேவிக்கே உகந்த ஐந்து பிரணவ மந்திரங்களில் ஒன்றான ஹ்ரீம் மிகவும் விசேடமானது. மனிதனையும் தேவியையும் இணைக்கும் ஒரு மந்திர பலம்தான் ஹ்ரீம் ஆகும்.

அவனைப் பின் தொடர்ந்தார். மலைகளில் ஏறுவது இலகு. இறங்குவது மிகச்சிரமம். ஒருவாறு எல்லோரும் சமதரைக்கு வந்துவிட்டனர்.

பிள்ளையைக் கையில் வேண்டிய தந்தை சாமி இன்று நீங்கள் எங்களோடு உணவருந்தவேண்டும் என்றார (கதிர்காம யாத்திரிகர்கள் ஒருவரை ஒருவர் சாமி பெரியசாமி சின்னசாமி என்றழைப்பது வழக்கம்) இளைஞன் சிரித்துக்கொண்டு இன்னொரு நாள் பார்ப்போம் . இன்று நான் அவசரமாகப் போகவேண்டும் என்றான். அப்போ சாமி நீங்கள் எங்கே தங்கியிருக் கின்றீர்கள் என்று குழந்தையின் தந்தையார் கேட்டார். வாலிபன் மாணிக்ககங்கைக் கரைக்கு கிட்ட இருப்ப தாகச் சொன்னான்.

எல்லோரும் மாணிக்க கங்கைக்கு அருகாமையில் வந்தனர். வாலிபன் சென்ற இடம் தெரியவில்லை. அவர்கள் மூவரும் ஆச்சரியத்துடன் பார்த்து மெய்சிலிர்க்க முருகனின் திருவிளையாடலை எண்ணி மனம் பூரித்தனர்.

அன்று முதல் அக்குடும்பம் கதிர்காம உற்சவத்தினத்தில் விரதமிருந்து தவறாது கதிர்காமம் சென்றனர். பின்னர் அரசியல் பிரச்சனை காரணமாக அவர்கள் யாத்திரைக்கு தடை போடப்பட்டது. ஆனால் கந்தனை அவர்கள் கணமேனும் மறந்ததில்லை கந்தனுக்குரிய விரதங்கள் அனைத்தையும் தவறாது அனுஷ்டித்து வந்தனர். கந்தன் கருணை அவர்களுக்கு எப்பொழுதும் கிடைத்தது. அக்குடும்பத்திற்கு இன்னல் வரும்போது தலைக்கு வருவது தலைப்பாகையோடு போவது போல கதிர்காமவேலன் அவர்களைக் காத்திருக்கின்றான். காக்கின்றான்!

# குறித்து வைக்கவேண்டிய முக்கிய தினங்கள்

| | |
|---|---|
| 23.7.95 | ஏகாதசி விரதம் |
| 25.7.95 | பிரதோஷ விரதம், ஆடிச்செவ்வாய் 2 |
| 27.7.95 | ஆடி அமாவாசை விரதம் |
| 31.7.95 | நாக சதுர்த்தி விரதம், ஆடிப்பூரம் |
| 1.8.95 | ஆடிச்செவ்வாய் 3 |
| 2.8.95 | ஷஷ்டி விரதம் |
| 4.8.95 | வரலக்ஷ்மி விரதம் |
| 7.8.95 | ஏகாதசி விரதம் |
| 8.8.95 | பிரதோஷ விரதம், ஆடிச்செவ்வாய் 4 |
| 10.8.95 | பூரணை விரதம் |
| 14.8.95 | சங்கடஹர கணபதி விரதம் |
| 15.8.95 | ஆடிச்செவ்வாய் 5 |
| 18.8.95 | கார்த்திகை விரதம், ஜன்மாஷ்டமி |
| 19.8.95 | ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி |
| 20.8.95 | ஆவணி ஞாயிறு 1 |
| 21.8.95 | ஏகாதசி விரதம் |
| 23.8.95 | பிரதோஷ விரதம் |
| 25.8.95 | அமாவாசை விரதம் |
| 27.8.95 | ஆவணி ஞாயிறு 2 |
| 29.8.95 | விநாயக சதுர்த்தி விரதம் |
| 31.8.95 | ஷஷ்டி விரதம் |
| 3.9.95 | ஆவணி மூலம், ஆவணி ஞாயிறு |
| 6.9.95 | பிரதோஷ விரதம் |
| 7.9.95 | நடேசரபிஷேகம் |
| 8.9.95 | பூரணை விரதம், உமாமகேஸ்வர விரதம் |
| 9.9.95 | மஹாளய பக்ஷம் |
| 10.9.95 | ஆவணி ஞாயிறு 4 |
| 14.9.95 | கார்த்திகை விரதம் |
| 17.9.95 | ஆவணி ஞாயிறு 5 |
| 20.9.95 | ஏகாதசி விரதம் |
| 22.9.95 | பிரதோஷ விரதம் |
| 23.9.95 | புரட்டாதிச் சனி 1 |
| 24.9.95 | அமாவாசை விரதம், மஹாளய பட்ச முடிவு |
| 25.9.95 | நவராத்திரி விரத ஆரம்பம் |
| 28.9.95 | சதுர்த்தி விரதம் |
| 30.9.95 | ஷஷ்டி விரதம், சரஸ்வதி பூசை ஆரம்பம், புரட்டாதிச் சனி 2 |
| 2.10.95 | மஹா நவமி, சரஸ்வதி பூசை |
| 3.10.95 | விஜயதசமி, கேதார கௌரி விரதாரம்பம் |
| 4.10.95 | ஏகாதசி விரதம் |
| 6.10.95 | பிரதோஷ விரதம் |
| 7.10.95 | புரட்டாதிச் சனி 3, நடேசரபிஷேகம் |
| 8.10.95 | பூரணை விரதம் |
| 12.10.95 | கார்த்திகை விரதம் |
| 14.10.95 | புரட்டாதிச் சனி 4 |
| 20.10.95 | ஐப்பசி வெள்ளி 1, ஏகாதசி விரதம் |
| 21.10.95 | சனிப்பிரதோஷம் |
| 23.10.95 | தீபாவளி, அமாவாசை, கேதாரகௌரி விரதம் |
| 24.10.95 | கந்த ஷஷ்டி விரதாரம்பம் |

தொகுப்பு : அமுதா

# இலங்கைத் திருநாட்டில் ஓர் இந்து மாமன்றம்.

தேவலோகேஸ்வரசர்மா


''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகெலாம்''

என்ற திருப்புராண கூற்றிற்கேற்ப எமது சமய நெறி வளர்ச்சி உலகெல்லாம் வியாபித்து வருகையில் எமது அகமும் உகமும் மகிழ்கின்றோம். அவ்வகையில் எமது மத கலாசாரமும் தமிழும் நிறைந்து காணப்படும் இலங்கை திருநாட்டிலே அவற்றைப் பேணிக்காக் கவென இலங்கையின் தலைநகராம் கொழும்பு மாநகரினிலே ஓர் இந்து மாமன்றம் கம்பீரமாக காட்சி தருவதை கண்குளிரக்காணும் போது இலங்கையைச் சேர்ந்த ஒவ்வொரு இந்துவும் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்வான் என்பதில் சந்தேகமில்லை. எத்தனையோ காலங்களாக இந்துமக்கள் இலங்கையிலே தமது கலாச்சாரத்தையும் தமிழையும் பேணி காப்பதற்கு அவர்களுக்கு என்று ஒரு மன்றம் இல்லாதது ஒரு பெரும் குறையாகவே காணப்பட்டது. அந்த குறை நீங்கி மகிழ்வுபெற இந்த மாமன்றம் தலைநிமிர்ந்து நிற்கின்து.


இந்த கட்டிடவேலை ஆரம்பிக்கப்பட்டு தேங்கியிருந்த வேளை 1990 ஆண்டு அக்டோபர் மாதமளவில் அதை ஊக்கமாகவும் முடுக்கிவிட்ட பெருமை அன்றைய மாமன்ற தலைவர் அமரரான வே. பாலசுப்பிரமணியம் அவர்களைச் சாரும். கொழும்பு சேர் சிற்றம்பலம் கார்டினர் வீதியில் எழிலாகவும் கம்பீரமாகவும் காட்சிதரும் இந்த இந்து மாமன்றக் கட்டிடத்தை உருவாக்க பாடுபட்ட கட்டிட கலை நிபுணர்கள் பெருமையை யாருமே பெருமை உள்ளம் கொண்டு வாழ்த்துவார்கள் என்பதில் ஐயமில்லை. அவ்வளவு எழிலாக கம்பீரக்காட்சி தருகின்றது. இந்து கலாச்சார பெருமைகளை அழகாக எடுத்து இயம்புகின்றது. இந்த மாமன்ற கட்டிடத்திற்கு இன்னும் ஒரு பெருமை உண்டு. மாமன்றத்திற்கு அருகாமையில் கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் வீற்றிருப்பது பெருமை தரும். சிறப்பு அம்சமாகும் . கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாம் முருகப்பெருமான் அருள் என்றும் மாமன்றத்திற்கு உண்டு.

இந்த மாமன்ற நிருவாக சபையினர் மிகவும் சிறப்பான முறையிலே இப்பெரும் பணியை ஆற்றி வருகின்றார்கள். திரு வி. கைலாசபிள்ளை, திரு கந்தையா நீலகண்டன், திரு சு. சத்தியமூர்த்தி, திரு தனபாலா இன்னும் முக்கியமான பல அன்பர்கள் இங்கே இந்த மாமன்றப் பணிகளிலே தம்மை அர்ப்பணித்து இருக்கின்றார்கள். இவர்களின் இனிய சேவை இந்துமத நல்லுலகம் என்றுமே மறக்கமுடியாதவையாகும். பெரும்பாலான வேலைகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன. இவ்வருட ஒக்டோபர் மாதத்தில் சம்பிரதாய பூர்வமாக திறந்துவைக்க எண்ணியுள்ளார்கள். அதற்கு முன்னோடியாக 5.2.95 அன்று விசேட சாந்தி பூசைகள் நடைபெற்றது. பெரும் திரளான மக்கள் சாந்தி பூசையில் கலந்து கொண்டார்கள்.

சாந்தி பூசையை ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் தேவஸ்தான பிரதம சிவாசாரியார் சிவஸ்ரீ குஞ்சிதபாத குருக்கள் நடாத்திவைத்தார்கள். இராமகிருஷ்ணமிசன் தலைவர் சுவாமி ஆத்மசாந்தி அவர்கள் ஆசி வழங்கினார்கள். அக்டோபர் மாதம் சம்பிரதாய பூர்வமாக திறப்பு விழா நடத்த இருக்கும் வேளை ஓர் மகானின் வருகையும் நடைபெற இருப்பதை நினைத்து உள்ளம் பூரிக்கின்றது. காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கரா சார்ய ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் வருகை பெரும்பாலும் எதிர்பார்க்கப்படுகின்றது. பெரியவாளின் வழிகாட்டலில் ஸ்ரீநடராஜர் சிவகாமசுந்தரி சிலைகள் செய்யப்பட்டு வருகின்றன. பிரார்த்தனை மண்டபத்திலே அவை வைக்கப்பட இருக்கின்றன. ஆறாம் மாடியிலே பிரார்த்தனை மண்டபம் அமைக்கப்படுகின்றது. மாமன்ற திறப்புவிழா நடைபெற இருக்கும் பொன் நாளை எதிர்பார்த்து காத்து இருக்கின்றார்கள் இந்து மக்கள். சிறப்பான முறையிலே மங்களகரமாக இவ்விழா நடைபெற கங்கை நடையணிந்த அந்தக் கைலாசநாதனின் பாதமதை பணிந்து நாமும் வாழ்த்துவோமாக!



# எழுத்துலகில் இளைய நெஞ்சங்கள்



## WHY DO HINDU'S HAVE SO MANY GODS?

In Hinduism there is only one god and is known by various diffrent names most commonly Brahaman( diffrent to brahama), Brahamam is a form that you cannot describe without a shadow of doubt.
Truth is what is permanent and will never change, this is called tat.
In the bhagawat Gita it states that '' the supreme is that from which these beings are born that they live and that into which when departing I enter'' . According to the vedas Brahamam is in the fire, water, tree and everywhere so he Omnipresent. For example in English $H_2O$ is water in tamil h20 is thanni even though it is a diffrent name it is the same $H_2O$, like that muslims call Allah Hindus call Brahamambut is the same one God in a diffrent languages. In the Gita lord Krishna says '' however you pray as long as you reach to me '' . Another example take the sun it shines into a pool of water it has over a million reflections. Only the ignorant will think all of these millions of reflections are a diffrent sun . But the wise will know even though it has a million reflections or over that there is one sun and these are aspects of the sun in the same way there are aspects of God the wise say God is the one who creates who preserves and who ultimately destroys only he evil. The creative aspects of God is called bharma, the preserved aspect of God is vishnu and the destructive aspective of God Shiva ( Mahesh). The persify of the creative aspect is bharma, the knowledge aspect of bharma is saraswathi. If you take a situation who will a child approach for the studies? The mother is this unusual? No! Because all of us have female and male characteristics all the love, tenderness and the gentle behaviour is the female characteristics and the rough, angry behaviour is the male characteristics. How can we see the formless? Through form for example a mother is telling a child his father is brave,intelligent and courageous but this child can never form love for this father. Like that we have the ideals to show characteristic of divine they show how to get to God this called the symbol. From the Gita Lord Krishna states '' Whatever form any devotee with faith wishes to worship to make that faith his steady.

## WHY DO HINDUS WORSHIP LORD GANESHA? WHY FIRST AS WELL?

The reason why Hindu's worship lord Ganesha is because he removes the obstacles we face, it is like in a forest where all the animals are under attack who will they approach to protect them. Like that we devotees look up to him like that. If you look closely at Ganesha in one hand he holds the instrument the rope of love which pulls you towards him. On the other hand he holds an instrument that guides you to the right path. The reason why Ganesha has a large stomach is because he holds the whole universe inside it. If you look very closely you will see a tusk in his hand and one of the tusks is broken. He broke it because when he was writing the Mahabharat the director told him if you ever stop writing this story will never happen and all of mankind will perish. Suddenly the ink finished and without any hesitation he broke his tusk.

**Theban Tharmarajah (13 Years old)**

கண்ணிற் காண்பதுன் காட்சிகையாற் றொழில்
பண்ணல் பூசை பகாடவது மந்திரம்
மண்ணொ டைந்தும் வழங்குயிர் யாவுமே
யண்ண லேநின் னருள்வடி வாகுமே
-தாயுமானவர்(Tayumanavar)

**" Whatsoever the eye seeth is thou. Whatsoever the hand doeth is Thy worship. What the mouth uttereth is Thy praise. The earth and other elements and all living things are Thy gracious forms, O Lord."**

ஆதி யனாதியு மாகி - எனக்
கானந்த மாயறி வாய்நின் றிலங்குஞ்
சோதி மௌனியாய்த் தோன்றி- அவன்
சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி
தோழி

**The Light which is the begining and without begining which shineth in me as Bliss, as Intelligence , appered unto me as the Silent One and spake, sister, words not to be spoken.**

### திருக்கோவையார்


போதோ விசும்போ புனலோ பணிகளது பணியோ
யாதோ வறிகுவ் தேது மரிதி யமன் விடுத்த
தூதோ வனங்கன் றுணையோ விணையிலி தொல்லைத்
தில்லை
மாதோ மடமயி லோவென நின்றவர் வாழ்பதியே

**The lotus or heaven, water or the Nega world, I know not which is the abode of her who standeth here as Death's Messenger or Cupid's trusty ally or maid of peerless ancient Tillai or pea-hen shy.**

பாயும் விடையான் றில்லையன் னாள்படைக்
கண்ணிமைக்குந்
தோயு நிலத்தடி தூமலர் வாடுந் துயரமெய்தி
யாயு மனனே யணங்கல் லளம்மா முலைசுமந்து
தேயு மருங்குற் பெரும்பணைத் தோளிச்
சிறுநுதலே

**The javelin eyes move of her that is like unto Thillai of Aran of the prancing bull, her feet touch the earth her flowers fade . O aching prying heart , no celestial is she of the slender brow shapely arms and waist that faints under the weight of those ample breasts.**

# KARNA, THE GREAT GIVER




The servant returned empty-handed...
No log is available either in the palace or anywhere else.
I am unfortunate. Let me go.
He ordered for an axe.
Let me chop off the pillars. They will be better used.
As he went on chopping the pillars, one side of the palace collapsed.
It is all right. I can't bear to send you empty-handed.
Oh! The palace is collapsing.
Arrange to send them in a cart.
On the way, Krishna and Arjuna saw the cart.
The great Karna chopped the pillars of the palace.
How did you
Arjuna, do you now understand? One who has a mind to give will find a way to give. No wonder I praise him. I think you too will agree now.

# GLEN CARRIERS LIMITED

## SHIPPING - AIR FREIGHT - TRAVEL

UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC.

TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS
**MAIN AGENT FOR AIRLANKA**

# AIR LANKA

**LONDON - COLOMBO - LONDON**

**01 AUGUST - 10 AUGUST £ 595**
**11 AUGUST - 30 NOVEMBER £485 (Yrly)**
**01 SEPTEMBER - 30 NOVEMBER £430 (3 Months)**

**LONDON - MADRAS - TRIVENDRUM - TRICHY - LONDON**
**(NO STOP OVER IN COLOMBO)**

**18 AUGUST - 30 NOVEMBER £410**

# BRITISH AIRWAYS

**LONDON (GATWICK) - COLOMBO - LONDON(GATWICK)**

**19 OCTOBER - 10 DECEMBER £495**
**11 DECEMBER - 19 DECEMBER £ 595**
**20 DECEMBER - 24 DECEMBER £650**

**ALL YOUR GOODS GO TO OUR BONDED WAREHOUSE IN COLOMBO**

உங்கள் விமானப் பயண ஒழுங்குகளுக்கும் உங்களின் பொருட்களை
ஸ்ரீ லங்காவிற்கு அனுப்புவதற்கும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த
சேவையினைப் பெறுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

# GLEN CARRIERS LIMITED

14, Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ
**Telephone : 0181 - 740 8379 / 0181 - 749 0595**
**Fax : 0181 - 740 4229 Telex : 929657 Glenca G**

**BONDED WAREHOUSE**

LAKSIRISEVA, 253/3 Avissawella Rd, Colombo 14, Tel: 575576

KUMARANS

# KUMARANS
# குமரன்ஸ்
## தமிழ்க்கடை
## KUMARAN BOOK CENTRE

லீலா
தயாரிப்புகளின்
அங்கீகாரம்
பெற்ற
விநியோகஸ்தர்கள்

அரிசிமா, குத்தரிசி, மிளகாய்த்தூள் மற்றும் பல
லீலா தயாரிப்புகளை
எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

எம்மிடம்
தமிழ்
புத்தகங்களும்
விற்பனைக்குண்டு

அரசியல்
பொருளாதார புத்தகங்களோடு பெருமளவிலான
பிரபல எழுத்தாளர்களின்
கதைப்புத்தகங்களும் கிடைக்கும்

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

**142-144 HOE STREET, WALTHAMSTOW,**
**LONDON E17**
**TEL : 0181 521 4955/0181 521 4411**
**FAX : 0181 521 9482**

# 6 Kumars MINI SUPERMARKET

இலங்கை, இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட உணவுப் பண்டங்கள்
கடல் உணவுப் பொருட்கள், எவர்சில்வர் பாத்திரங்கள் **Rice cookers**
சஞ்சிகைகள் **Audio, CD** கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில்
பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம் ***6 Kumars***
நம்பிக்கை! நாணயம்! தரம்! மலிவுக்கு மறுபெயர் ***6 Kumars***

*புடவைத் தேவைகளுக்கு எமது மற்றுமோர் ஸ்தாபனம்*

## Vashtraa Silk

எம்மிடம் திருமண கூறைப்புடவைகள் மற்றும்
சகலவிதமான புதியரக புடவைகள்
பாவாடைகள், நகைகள், பரதநாட்டிய நகைகள்
ஆண்களுக்கான பட்டு வேட்டி , சங்குமாக் சாரங்கள்
மணமகனுக்குத் தேவையான சர்வாணி, குருத்தா, தலைப்பாகை
(விற்பனைக்கும் வாடகைக்கும்) சிறுவர்களுக்கான றெடிமேற் ஆடைகள்



**285, 287 High Street, Manor Park,**
**London E12 6SL**
**Tel / Fax : 0181 471 5742, 0181 471 3707**

## KSP SUPER FOODS

சகலவிதமான
இலங்கை, இந்தியப்
பொருட்களையும்
ஒடியோ வீடியோக்களையும்
மலிவு விலையில் மனநிறைவோடு பெற
நாடவேண்டியநம்பிக்கையான
ஸ்தாபனம்

**8 High Street North**
**Manor Park**
**London E12 6SA**
**Tel : 0181 471 7806**
**0181 552 8053**

**119 Barking Road**
**East Ham**
**London**
**E 6**
**Tel : 0181 503 5183**

## STATION SUPER STORE

உங்களுக்குத் தேவையான
சகலவிதமான மளிகைப் பொருட்களுக்கும்
பத்திரிகைகள் சஞ்சிகைகள்
ஆகியவற்றுக்கு மனநிறைவோடு
ஈஸ்ட்காமில் நீங்கள் நாடவேண்டிய
நம்பிக்கையும் நாணயமும் நிறைந்த
ஸ்தாபனம்

**6 STATION PARADE**
**EAST HAM E6 1JD**
**TEL : 0181 503 4711**

## WELCOME CENTRE

**CD, AUDIO**
கசட்டுகள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
தமிழ், ஆங்கிலம் இந்தி
ஆகிய மொழிப்படங்கள்
வாடகைக்கும்
எம்மிடம் உண்டு

209 High Street North, East Ham
London E6 2JA

TEL : 0181 552 2727
**OPEN SEVEN DAYS**

## VARSHI'S FOOD STORE

நியூமோல்டனில் ஒரு தமிழ்க் களஞ்சியம்



இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும்
இறக்குமதி செய்யப்பட்ட
அனைத்து உணவுப் பண்டங்களுடன்
மரக்கறிவகைகள்
பத்திரிகைகள், சஞ்சிகைகள்ஓடியோ,வீடியோ,சீடி
ஆகியவற்றுக்கு நீங்கள் நாடவேண்டிய
தரமான நம்பிக்கையான ஸ்தாபனம்

**VARSHI'S FOOD STORE**
**103 BURLINGTON ROAD**
**NEW MALDEN, SURREY KT3 4LR**
**(NEAR BURLINGTON JUNIOR SCHOOL)**
**TEL : 0181 336 0061**

# SEELANS

HIGH STREET NORTH,
MANOR PARK LONDON E12 6PH
TEL : 081 472 2942 FAX : 470 7284

நம்பிக்கைக்கும் நாணயத்துக்கும் தரத்துக்கும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

## சீலன்ஸ்

எம்மிடம் தரமான உணவுப்பண்டங்கள்
உடன் மரக்கறிவகைகள்
பதிதிரிகைகள் , சஞ்சிகைகள், ஓடியோ, வீடியோ, சீடி ஆகியவற்றுடன்
மின்குமிழ் இணைக்கப்பட்ட கண்ணைக்கவரும்
கடவுட்திருவுருவப் படங்கள் மலிவு விலையில் தரத்தோடு கிடைக்கும்

பிரபல நாவலாசிரியர்களின் நாவல்கள் விலைக்கும் வாடகைக்கும் உள்ளன

# VANEE AGENCY

ஐரோப்பாவில் முதல் தமிழ்க் கடை

எம்மிடம்
கோயிற் தேவைகளுக்கான சகல பொருட்களும்
இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சகலவித உணவுப்பொருட்களும்
பட்டுவேட்டி, சால்வை மற்றும் திருமணத்திற்குத் தேவையான பொருட்களும்
நடனம் பயில்பவர்களுக்குத் தேவையான பொருட்களும்
யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடுகளான சைவசமயபோதினி, பாலபாடம், பாலபோதினி
கண்ணைக்கவரும் வண்ணச் சித்திரக் கதைகள்
ஆகியன நியாயமான விலையில்
நிறைந்த தரத்தோடு காத்திருக்கின்றன.

**காலம் தாழ்த்தாது விரைந்து வாருங்கள்**

**317 HIGH STREET NORTH, MANOR PARK**
**LONDON E12 6SL**

**TEL : 0181 471 8366**

## With Best Complements
## from

*P.B.Singham*

# Photographic Studio

**346 High Street North**
**Manor Park , London E12, 6PH**
**Tel: 0181 552 9419 Fax 0181 514 3383**






உங்களுக்குத் தேவையான
தமிழ், ஆங்கிலசஞ்சிகைகள்
தமிழ், ஹிந்தி, ஆங்கில,வீடியோ, ஓடியோக்கள்
மற்றும் இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட
உணவுப் பண்டங்கள்
உடன் மரக்கறிவகைகள்
ஆகியவற்றை மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
கொள்வனவு செய்வதற்கு
நம்பிக்கையோடு அணுகவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

**249-251 Fore Street, Edmonton, London N18**
**Tel : 0181 884 4979 Fax : 0181 345 6317**

25 புது கடை, பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம், இலங்கை

# ராசம் சில்க்ஸ்

# RASAM SILKS

133, Caledon Road, East Ham, London E6

**Tel: 0181 - 552 6060** Fax: 0181 - 470 0008

## வீடு தன்னில் உங்கள் நாடல்

**பட்டுப்புடவைகள் மலிவு விற்பனையில்**

எங்களிடம் உங்கள் தேர்வுகள்

*மணமகளுக்கு வேண்டிய கல்யாண கூறைப்புடவைகள், (வண்ண வண்ண டிசைன்கள்) பனாறஸ், காஞ்சிபுரம், தர்மாவரம், மைசூர் சில்க்ஸ், காஸ்மீர் சில்க், ஜப்பான் நைலெக்ஸ், மற்றும் பிளவுஸ் துணிவகைகள், துண்டுத் தாவணிகள் (வயதிற்கேற்ற) றெடிமேற் பிளவுஸ், பஞ்சாபி வகைகள் மணப்பெண்ணுக்குத் தேவையான அலங்காரப் பொருட்கள் (வாடகைக்கும்) ஆடை அணிகலன்கள், மெட்டி உட்பட*

*மணமகனுக்குத் தேவையான சர்வாணி, குருத்தா, தலைப்பாகை வகைகள் (வாடகைக்கும்)*

*விருப்பமான டிசைன்களில் பிளவுஸ்*
*உடனுக்குடன்*
*(வெகு விரைவில்) தைத்துத் தரப்படும்.*

*இலங்கை, இந்தியா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு உடனுக்குடன் பணம் அனுப்ப நாட வேண்டிய நம்பிக்கையான இடம் இதுவே.*

*Fax வசதிகளும் செய்து தரப்படும்*
*நாடுங்கள், காணுங்கள்,*
*உங்கள் திருப்தியே*
*எங்கள் திருப்தி.*
*நன்றி, வருக*
*தொடர்புகளுக்கு Bala*
Rasam Silks



# BHAGWANJI C. JEWELLERS Ltd

## பகவான்ஜி சி. ஜீவர்லர்ஸ்

*First Asian Jewellry shop For Low Fixed Prices*

நம்பிக்கை

நாணயம்

துரிதம்



அம்மன் தாலி
தாலிக்கொடி
பென்ரன்
அட்டியல்
பதக்கம்
மோதிரம்
காப்பு
தோடு
நெக்லஸ்
சங்கிலி

பொன்னுருக்கலுக்கான வசதிகளும் உங்கள் வசதிகளுக்கேற்ப ஒழுங்கு செய்யப்படும்



**BHAGWANJI C.JEWELLERS Ltd**
**"BHAGWANJI HOUSE"**
**48 EALING ROAD, WEMBLEY**
**MIDDLESEX HA0 4TQ**
**TEL: 0181 903 0033 / 0181 903 4723**
**FAX: 0181 900 0215**

**OPEN 7 DAYS A WEEK**


சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு ஐரோப்பாவில் தரமான செல்வம் அச்சகத்தினரால் அச்சிடப்பட்டு சைவ முன்னேற்ற சங்கத்தால் 23.7.1995 அன்று வெளியிடப்பட்டது.